Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 316 தை. January. 2023

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
29TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien &
Schmuck
32 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்
Königswall 16 (Am Hbf) 44137 Dortmund | Tel:0231 162377



## ஜனநாயகத்துக்காக குரல் கொடுப்பதால் 'பயங்கரவாதி'களாக்கப்படும் சிங்களவர்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி


## செகப்பா இருப்பவன் பொய் சொல்லமாட்டான்?

பிரியா இராமநாதன்

## காற்று வடிக்கும் சிற்பங்கள்

மாதவி





அனைவருக்கும்
எமது தைப் பொங்கல்
நல்வாழ்த்துகள்

Dr.IN






# இறக்குமதி அல்ல இவன் மதி



மாதவி

பொறியியல் வல்லுநர்கள், விஞ்ஞானிகள் இவர்கள் எல்லாம் மேற்குலகத்தவர்கள் மட்டுமே! கண்டு பிடிப்புகளை அவர்கள் செய்ய, அதனை உபயோகிப்பவர்களாக, பயன்படுத்துபவர்களாக, நாம் இருப்போம், அதிலும் கண்டு பிடிப்புகளைப் பயன்படுத்த தெரிந்தாலே, நமக்கு கண்டு பிடித்தவர்களை விட பெருமை அதிகமாக இருக்கும். நம்மைச் சுற்றி இந்த பொறியியல் வல்லுநர்கள், விஞ்ஞானிகள் எந்த இடத்திலும் தலைகாட்ட மாட்டார்கள், என்ற நம்பிக்கை, எம்மோடு ஊறிப்போய் விட்டது. அப்படி யாரும் தலைகாட்டினாலும், அவர்களை, தலைதூக்கவிடாது, ஏதோ ஒரு விதத்தில் அவமானப்படுத்தி, அல்லது, தட்டிக்கொடுக்காமல்,முளையிலேயே,கிள்ளி எறிந்தும் விடுவோம்.

இத்தனைக்கும் மத்தியில் 1965 ம் ஆண்டளவில், ஒரு பொறியியல் நுட்பம் சார்ந்த ஒரு வல்லவன் நமது ஊருக்கு அருகில் கட்டுவன் கிராமத்தில் வாழ்ந்து வந்தார்.

குரும்பசிட்டி, குப்பிளான்,கிராமத்து மாணவர்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மகாஜனா கல்லூரி, இங்கு எல்லாம் படிப்பவர்கள் அன்று பொடி நடையாக கட்டுவன் கிராமத்தை தாண்டியே செல்வார்கள். அப்படி செல்லும் போது கட்டுவன் தெல்லிப்பழை பிரதான வீதியில் காலையில் அவர் மாணவர்களுக்கு ஒரு அறிவித்தல், கொடுப்பார்.

நான் ஒரு பொருள் செய்து இருக்கிறேன், பாடசாலை முடிந்து வீடு செல்லும் போது வந்து பார்த்து, செல்லுங்கள், என்பார்.

சிலர் செல்வார்கள், சிலர் அவர் அறுவை என்று அவர் வீடுப்பக்கம் வந்ததும், விரைவாக, மறைவாகவும் ஓடித் தப்புவர். நான் பல தடவை அவரது திறைகளை பார்த்து வியந்தது உண்டு. அதனால் நான் நிச்சயமாக,


30 ஆம் பக்கம் பார்க்க...



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 316



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# ஜனநாயகத்துக்காக குரல் கொடுப்பதால் 'பயங்கரவாதி'களாக்கப்படும் சிங்களவர்



இலங்கையிலிருந்து ஆர்.பாரதி

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் தென்னிலங்கையில் தீவிரமடைந்து வருகின்றது. தமிழ் மக்களுடைய போராட்டத்தை ஒடுக்குவதற்காக ஒரு தற்காலிக ஏற்பாடு எனக் கூறப்பட்டு கொண்டுவரப்பட்ட இந்த சட்டமூலம் இப்போது நான்கு தசாப்தங்களையும் தாண்டி நடைமுறையில் உள்ளது. அதனைவிட கோட்டா கோ ஹோம் போராட்டத்தின் பின்னர் சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளை அடக்குவதற்கான ஆயுதமாகவும் இது பயன்படுத்தப்படும் நிலையில்தான் சிங்கள மக்கள் இதற்கு எதிராக இப்போது கிளர்ந்தெழுந்திருக்கின்றார்கள்.

ஜெனிவா உட்பட பல்வேறு சர்வதேச அரங்குகளில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற வாக்குறுதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. போர் முடிவுக்கு வந்து பதின்மூன்று வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை அரசாங்கத்தினால் எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியவில்லை. இதனை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டமைக்கு அதுதான் காரணம். உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் உருவாகியிருந்த அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு இதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக மற்றொரு சட்டம் கொண்டுவரப்படும் என்ற கருத்து அரசாங்கத் தரப்பில் தற்போது முன்வைக்கப்படுகின்றது. சர்வதேச ரீதியாக உருவாகியிருக்கும் விமர்சனங்களை எதிர்கொள்வதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என அரசாங்கம் சொல்லிக்கொண்டாலும், தமது பிடியை இறுக்கிக்கொள்வதற்கும், ஜனநாயக ரீதியான போராட்டங்களை ஒடுக்குவதற்கும் இதேபோன்ற சட்டம் ஒன்று அரசாங்கத்துக்குத் தேவையாக இருக்கின்றது. அதனால்தான், தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒத்த அதிகாரங்களையுடைய மற்றொரு சட்டமூலத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

## ஜனநாயக போராட்டமும் இலக்காகும் சிங்களவரும்

ராஜபக்ஷக்களுக்கு எதிராக தென்னிலங்கையில் இவ்வருட ஆரம்பத்தில் உருவான அரகலய எனப்படும் இளைஞர் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம்தான் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுகின்றது. அரகலயவின் முக்கிய தலைவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பக்காவலில் வைக்கப்பட்டபோதுதான், இந்த சட்டமூலம் எந்தளவுக்கு கொடூரமானது என்பதை சிங்கள மக்கள் உணரத் தொடங்கினார்கள். அரசுக்கு எதிரான போராட்டங்களை விட, பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான போராட்டங்களும் தென்பகுதியில் தீவிரமடைந்திருப்பதற்கு அதுதான் காரணம்.




தமிழ் மக்களுக்கு எதிராக இந்தச் சட்டமூலம் பயன்படுத்தப்பட்டு தமிழ் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் வைது செய்யப்பட்டு காலவரையறையற்ற வகையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டபோது, அவற்றைப் பார்த்து ரசிப்பவர்களாக மட்டுமே சிங்கள மக்கள் இருந்தார்கள். இப்போது, இது அவர்களை நோக்கியும் பாயத் தொடங்கிய பின்னர் தான் சிங்கள மக்கள் விழித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அரகலய கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கியவர்களான பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகே, ஹசந்த ஜீவந்த குணதிலக்க, வண கல்வேவ சிறி தம்ம தேரர் ஆகியோர் கைது செய்யப்பட்டு 90 நாட்களுக்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவர்களை 90 நாட்களுக்குத் தடுத்துவைத்து விசாரிப்பதற்கான அனுமதியை வழங்கினார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் உள்ள மிகவும் கொடூரமான அம்சங்களில் இதுவும் ஒன்று. பயங்கரவாத சம்பவம் என்பதற்கு திட்டவட்டமான வரையறைகள் எதுவும் இல்லாத நிலையில், அரசாங்கத்துக்கு எதிராக ஜனநாயக ரீதியில் சட்டத்துக்கு உட்பட்டு போராட்டங்களை நடத்துபவர்கள், கருத்துக்களை வெளியிடுபவர்களைக் கூட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து நீண்ட காலத்துக்கு விசாரணைகள் எதுவும் இல்லாமல் தடுத்துவைக்க முடியும். அரகலய கிளர்ச்சியாளர்கள் எந்தவிதமான பயங்கரவாதத் தம்பவங்களிலும் தொடர்புபட்டிருக்காத போதிலும், அவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு, சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டமை சிங்கள மக்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக 40 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்த இந்த சட்டமூலம்

24 ஆம் பக்கம் பார்க்க...





6 ANNIVERSARY
K.K.L.
KKL
Textilien Schmuck Haushaltsware
6 ஆம் ஆண்டு நிறைவு மற்றும் தைப்பொங்கலை முன்னிட்டு
12.01.2023 - 14.01.2023
50% முதல் 70% வரை விலைக் கழிவில்
சாறி, சாறி பிளவுஸ், பஞ்சாபி செட், லெகங்கா, குர்தா, சிறுவர் ஆடைகள் etc அனைத்தும்
இமிரேஷன் நகைகள் அனைத்தும் 20% கழிவு
வீட்டு சமையல் உபகரங்கள் அனைத்திற்கும் நாடுங்கள்
மல்லிகைப்பூ மாலை, கல்யாண மாலை இங்கு கிடைக்கும்
100 € க்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் நிச்சயம் பரிசுப் பொருட்கள் உண்டு
சாறி பிளவுஸ் தைத்து கொடுக்கப்படும்
அனைவருக்கும் எமது தைப்பொங்கல் நல் வாழ்த்துகள்
Rheinische str.56 44137 Dormund | Tel: 0231 96 98 6610
@kkl.textilien
@kkl.textilien



# மனைவி என்பவள் வேலைக்காரி அல்ல!



விமல் சொக்கநாதன்
(இங்கிலாந்து)

கட்டார் நாட்டில் உலக உதைபந்தாட்டப் போட்டிகள் நடந்து கொண்டிருக்கும்போது, "கட்டார் தெரிவு செய்யப்பட்டிருக்கக்கூடாது!" என்று வாதப்பிரதிவாதங்கள் பிரிட்டிஷ் வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் கட்டுக்கட்டாக பொது மக்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. நான் எழுதும் 'இலண்டனிலிருந்து விமல்' கட்டுரைகளை நீங்கள் படிக்காமல் விட்டிருந்தால், நவம்பர் 13 ஞாயிறு வீரகேசரியில் நான் எழுதிய 'கட்டாரின் கோலங்கள்' கட்டுரையில் குறிப்பிட்டிருந்த விஷயங்களை சுருக்கித் தருகிறேன்.

"இஸ்லாமிய ஷரியா சட்டம் கடைப்பிடிக்கப்பட்டுவரும் கட்டார் என்ற இஸ்லாமிய நாட்டில் போய் புற்றீசல்கள்போல குவியப்போகும் மேற்கு ஐரோப்பிய உதைபந்தாட்ட ரசிகர்கள் கட்டார் நாட்டின் மதுபானத்தடை, ஓரின உறவுத் தடை மட்டுமல்ல, உங்கள் சகோதரியின் தோளில் மனைவியின் தோளில் கைபோடும் தடை – இப்படியான தடைகளை மீறுவோருக்கு சிறைத்தண்டனை". இவை பற்றியெல்லாம் விரிவாக நான் என் நவம்பர் 13 ஞாயிறு கட்டுரையில் எழுதியிருந்தேன்.

நான், முன்குறிப்பிட்டிருந்த பிரிட்டிஷ் வானொலி, T.V விவாதங்களில் கட்டாரின் கெடுபிடியான சட்டங்கள் காரசாரமாக விவாதிக்கப்பட்டன. பெரும்பாலான பிரிட்டிஷ் நேயர்கள் தங்கள் ஆதங்கங்களை கொட்டித் தீர்த்தார்கள். 2022இல் இந்தப் போட்டி கட்டாரில் நடத்தப்படுவதற்கு அனைத்துலக உதைபந்தாட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் கட்டாரிடமிருந்து பெருந்தொகை பணத்தை லஞ்சமாக பெற்றுக் கொண்டதாக கண்டறியப்பட்டுள்ளது. அதற்காக போட்டி நிறுத்தப்படவில்லைளூ தொடர்ந்து நடத்தப்பட அனுமதி வழங்கப்பட்டது.

விவாதத்தில் பேசிய ஒரு பிரிட்டிஷ் வாலிபர் – "இதென்ன நாடய்யா கட்டார்? மதுபானம் அருந்தக்கூடாது! ஓரினச் சேர்க்கையில் ஈடுபடக்கூடாது! என்றெல்லாம் இந்த 21 ஆம் நூற்றாண்டில் தடை விதிக்கலாமா?" என்று ஆக்ரோஷமாகப் பேசினார். இந்த விவாதங்களின் நடுவர் ஒரு மூத்த பிரிட்டிஷ் நிர்வாக அதிகாரி. எந்தவிதமான கோபமும் இல்லாமல் பதிலளித்தார்.

"இந்த அனைத்துலகப் போட்டியை நடத்தும் உரிமை கட்டாருக்கு வழங்கப்பட்டமை தவறு என்று நீங்கள் வாதாடுவது சரிதான். லஞ்சம் வாங்கிக் கொண்டு உரிமையை பொறுப்பற்ற விதத்தில் கட்டாருக்கு கொடுத்த நிர்வாக சபை அதிகாரிகள் தவறு செய்தவர்கள்தான்! அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் ஐரோப்பா வாழ் உதைபந்தாட்ட ரசிகர்கள் முஸ்லிம் நாடுகளைப்பற்றி எதுவுமே தெரியாதவர்கள். மதுபானத்தடை, ஓரினச் சேர்க்கை தடை, பெண்கள் சுதந்திரத்தின்மீது தடை, பகிரங்கமாக உலா வருதல் தடைபற்றியெல்லாம் எதுவுமே அறியமாட்டார்கள். அதனால் அந்த நாடு பத்தாம் பசலித் தனமாக இருப்பதாக நையாண்டி செய்கிறார்கள். கட்டார் நாடு, தமது பழம்பெரும் கலாசாரங்கள் ஆகியவற்றை கைவிட்டு ஏன் பிரிட்டனின் தரத்துக்கு வரக்கூடாது என்று நீங்கள் விரும்புவது தவறு! நடக்க முடியாத ஒரு விஷயம்!!" – என்று குறிப்பிட்டார் அந்த மூத்த பிரிட்டிஷ் அதிகாரி. "அவர்கள் அவர்களின் போக்கில் வாழட்டும். எங்கள் பழக்கவழக்கங்களை அவர்கள்மீது திணிப்பது மகா தப்பு!" என்று அவர் வலியுறுத்திய விதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது! என்ன இருந்தாலும் உலகின் இருண்ட நாடுகளுக்குள் நுழைந்து கல்வித் தீபம் ஏற்றி அவர்களின் வாழ்வை மலர வைத்த வெள்ளை இன பிரிட்டிஷ் நிர்வாக பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது எனக்கு தெளிவாக தெரிய வந்தது.

"அவர்கள், அவர்கள் போக்கில் வாழட்டும். எங்கள் பழக்கவழக்கங்களை அவர்கள் மீது திணிப்பது மகா தப்பு!" என்று அவர் வலியுறுத்தியமை, தமிழர்களாகிய எங்கள் குடும்பங்கள் பலவற்றில் பல தலைமுறைகளாக இருந்துவரும் ஒரு அருவருக்கத்தக்க வழக்கத்தை என் கவனத்திற்கு கொண்டு வந்தது.

மனைவியாக கணவன் வீட்டுக்குள் புதிதாக வருபவள் ஒரு புதிய வேலைக்காரி / ஒரு புதிய அடிமை என்ற கருத்து அவளது புதிய மாப்பிள்ளைக்கு வருகிறதோ இல்லையோ, புதுமாப்பிள்ளையின் தாயாருக்கும் சகோதரிகள் சிலருக்கும் இருக்கவே இருக்கிறது. என் கருத்துக்கு ஆதரவாக – சில மனைவியரின் வாழ்க்கையை உங்கள் முன் கொண்டு வருகிறேன். இவை கற்பனை அல்ல. உண்மைச் சம்பவங்கள். பெயர்களும் இடங்களும் மாற்றப்பட்டுள்ளன.

நாயகி 1 – நிஷேவிதா – பெற்றோரின் செல்லப் பெண். யாழ்ப்பாணத்தில் புகழ்மிக்க கன்னியர் கல்லூரியில் A.L பரீட்சைக்காக தயார் செய்யும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். பிரம்மன் அவளுக்கு தாராளமான அழகை அள்ளி வழங்கி இருந்தான். பெண்ணுக்கு பெண்ணே ஆசை கொள்ளும் பேரழகு! இந்த அழகு தனக்கும் தாயாருக்கும், தனக்கும் கணவருக்கும் இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை.

அவளது கன்னியர் மடத்தில் விஞ்ஞான கண்காட்சி. தாம் செய்த விஞ்ஞான உபகரணங்களை மேசையில் வைத்து மாணவியரே கண்காட்சி பார்வையாளர்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டும். பத்து மாணவர்கள் சுற்றி நிற்க, மாணவி தனது பரிசோதனை உபகரணங்களை உரத்த குரலில் விளக்க வேண்டும். அந்த பத்து மாணவர்களுக்கு விளக்கி முடித்ததும், வேறு பத்து மாணவர்கள் சூழ்ந்து நிற்பார்கள். அந்த வேளையில்தான் ஆகாஷ் அவளைக் கவனித்தான். ஒரு தடவை, இரு தடவை, மூன்றாம் தடவையும் வந்தபோது நிஷேவிதா கண்டுபிடித்தாள். மறுநாளும் வந்து தான் கொழும்பு மாணவன் என்றும் தனக்கு அவளை மிகவும் பிடித்திருக்கிறது என்றும் காதல்மொழி பேசினான்.

பள்ளித் தோழிகள் மூலம் இந்தக் கதை தாயாரின் காதுகளை எட்டியது. என் மகளுக்கு அவளது அழகே ஆபத்தாகிறது. அவளுக்கு பட்டப்படிப்பு வேண்டாம் என்று தாய் தீர்மானித்தாள். இதற்கு காரணம் தாயாரின் தோழி ஒருத்தி கொண்டு வந்த திருமண Proposal இலண்டன் மாப்பிள்ளை ஒரு கிழமையில் U.Kக்கு திரும்பிப்போய் விடுவாராம் என்ற செய்தி தாயார் தன் புதல்வி நிஷேவிதாவுக்கு கிடைத்த அதிர்ஷ்டம் என்று கருதினாள்.

கொழும்பிற்கு அன்று மாலையே புறப்பட்டாள். கொழும்பில் உறவினர் வீட்டுக்கு மாப்பிள்ளை சுரேன் வந்தார். பெண்ணைப் பார்த்ததும் தனக்கு பெண்ணை பிடித்து விட்டது என்றார். யாருக்குத்தான் அந்த அழகியை பிடிக்காமல் போகும்? அவர் இலண்டனுக்கு திரும்பிப்போக முன் கல்யாணம் நடந்தது. இப்போது நிஷேவிதா இலண்டன் குடும்பப் பெண். அவரது வேலை, கார், வீடு எல்லாம் அவர் சொன்னது போலத்தான் இருந்தது. ஆனால் மாப்பிள்ளை சொல்லாமல்விட்ட மிக முக்கிய விஷயம் தாம் ஒரு முன்கோபி, பொறாமைக்காரன், வீட்டுச் சாப்பாடு விஷயத்தில் எல்லாம் சூடாக இருக்க வேண்டும். Bread கூட சூடாக இருந்தால்தான் அவர் சாப்பிடுவார். அதற்காக Microwaveஇல் மீண்டும் சூடாக்கப்பட்ட பாணே தினமும் கேட்பார். Coffeeயும் எங்களைப்போல சூடாக மட்டும் என்றால் போதாது. Coffee மிகக் 'கொதியாக'

18 ஆம் பக்கம் பார்க்க...




Lucky Fly Reisebüro
Luckyfly
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
2023
EARLY BOOKING OFFER
QATAR
Colombo
ab:749€
அனைவருக்கும்
எமது இனிய தைப்பொங்கல்
நல்வாழ்துகள்
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
SriLankan
QATAR AIRWAYS
Emirates
Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany



# கருப்பா? சிவப்பா?

## செகப்பா இருக்கவன் பொய் சொல்லமாட்டான்?



பிரியா இராமநாதன்
(இலங்கை)

"செகப்பா இருக்கவன் பொய் சொல்லமாட்டான்" என்கிற கவுண்டமணி நகைச்சுவைக்கேற்ப, நம்மை அறியாமலேயே வெண்மை என்கிற வார்த்தை தூய்மையின் அடையாளமாகவும், கருப்பு என்பது திருட்டுத் தனத்தின் அடையாளமாகவும் மாறியிருக்கின்றதெனலாம். மக்களை ஏமாற்றி பணம் பறித்தால் அது கறுப்புப் பணம், சினிமா வில்லன்கள் கறுப்பாகத்தான் இருக்கவேண்டும் என்பது பல திரைப்படங்களில் எழுதப்படாத விதி. "நன்கு சிவந்த, மெல்லிய, உயரமான அழகான மணமகள் தேவை", என்ற வாசகத்துடனேயே இன்று அநேகமான மணப்பெண் தேவை விளம்பரங்கள் உலவிக்கொண்டிருக்கின்றன. "எனக்கு நல்ல கலரான பொண்ணாப் பாருங்க", பெண் தேடும் படலம் ஆரம்பித்துவிட்டால் பல மாப்பிள்ளைகளின் பிரதான கோரிக்கையும் இதுதான் . ஆளுமை, கல்வி,குடும்பப் பிண்ணனி, உத்தியோகம் என்று வாழ்க்கைக்கு அவசியமான எத்தனையோ அம்சங்கள் இருக்க, சிவப்பு நிறத்தில் மட்டும் ஏனிந்த மோகம் ?!

காலங்காலமாக உழைக்கும் வர்க்கம் என்பதனாலும், தற்ப வெப்ப சூழலினாலும் நம் தமிழர்களின் நிறம் சராசரியாக கருப்பு நிறமே. சிலர் மாநிறத்தில் இருந்தாலும் பெரும்பாண்மை கருப்புநிறமே. உண்மை இவ்வாறிருக்க வயிட்னிங் க்ரீம் முதல் பேசியல்வரை முகத்தை வெண்மையாக்கும் முயற்சிக்காக நாம் செலவழிக்கும் தொகை இன்று பன்மடங்கு எனலாம். சில நிமிடங்களுக்கு ஒருமுறை தொலைக்காட்சியில் காட்டப்படும் வெண் தோல் விளம்பரங்களால், கருப்பான பெண் மீதும்,ஆண் மீதும் மறைமுக வன்முறைகள் தொடுக்கப்படுகின்றன என்றால் அது மிகையில்லை.ஓர் சமூகத்தினது நிறத்திற்கு எதிரான நிறவெறியை நுகர்வோராகிய நாமும், ஊடகங்களும் ஊக்குவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதே மறுக்கவியலா உண்மை .

> **தமிழே அறிந்திராதவர்கள் எல்லோரும் தங்கள் நிறத்தினாலேயே கதாநாயகி ஆகிக்கொண்டிருக்கிறார்கள்.**

"அழகு என்பது வரையறைக்கு உற்படுத்த முடியாதது " என்பதனை உலகமயமாதல் இன்று தலைகீழாக்கியுள்ளது .மனிதனுக்கு மனிதன் அவனது வேறுபட்ட வாழ்க்கைச் சூழலை ஒட்டியும், பலவிதமான காரணத்தினாலும், அழகு பற்றி வெவ்வேறு விதமான பார்வையினை அவன் கொண்டிருந்தான். ஆனால், சந்தைத்தளம் இதை இன்று புரட்டிப் போட்டிருக்கின்றது. அழகு என்பதற்கு உலக அழகுராணிப் போட்டிகள் வழங்கும் தகுதிகளாக சிவந்த மேனி ,மெல்லிய இடை, கூர் மூக்கு, 5.6 அடிகளுக்கு மேற்பட்ட உயரம் போன்றவையே அழகின் வரையறையாகிப்போனது .(அண்மைய காலங்களில் சில கறுப்பின அழகிகளின் தேர்வுக்கான மறைமுக காரணி, பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புக்களை ஆபிரிக்க மற்றும்



ஆசிய கண்டங்களில் "சந்தைப்படுத்தும் நோக்கம் என்பது யாவரும் அறிந்ததே) அண்மைய தமிழ்த் திரைப்பட கதாநாயகிகள் எல்லோருமே சிவந்தவர்கள், அநேகமாக தமிழ்நாட்டைத் தாண்டிய அண்டை மாநிலத்தவர்கள். தமிழ்ப்பெண்களின் நிறம் தகுதி குறைவானவொன்றாக நினைக்கப்படும்போது, தமிழே அறிந்திராதவர்கள் எல்லோரும் தங்கள் நிறத்தினாலேயே கதாநாயகி ஆகிக்கொண்டிருக்கிறார்கள். மேலும், "செவப்பா இருக்கவன் பொய் சொல்ல மாட்டான், வெள்ளையா இருக்கவன் வெகுளி" போன்ற பஞ்ச் வசனங்கள்மூலம் ஒருவகையான பாசிச மனப்பாங்கு மக்கள் மனதில் உருவாக இந்த சினிமாவும் அடிகோலுகின்றது .

சமுதாயத்தில் இயல்பாகவே உடல் தோற்றத்திற்கு மிகுந்த மதிப்பளிக்கப்படுகின்றது. ஓர் குழந்தை பிறந்தவுடனேயே ஆணா? பெண்ணா? என்று கேட்ட மறுநிமிடமே குழந்தை கருப்பா? சிவப்பா ? என்ற

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்




# ஓ... 2023 பிறந்து விட்டது

## நீங்கள் எப்போது சந்தோமாக இருப்பீர்கள்?

வாண வேடிக்கைகள், கோடி நட்சத்திரங்களை அள்ளி அள்ளிக் கொழிக்க் பட்டாசு பட படக்க் புத்தாடை மினு மினுக்க் கண்ணாடி டம்லர்கள் டிங் டிங் எனச் சிணுங்க் மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரிக்க Happy New year வாழ்த்துக்கள் கட்டித் தழுவல்கள் ஆசை முத்தங்களோடு Happy New Year!

ஓ...2023 பிறந்து விட்டது.

Happy New Year!

பிறக்கும் புதிய ஆண்டு மகிழ்ச்சியாக அமைய வேண்டும். வருடம் பூரா மகிழ்ச்சியாக அமைய வேண்டும் என்பது தான் எம் எல்லோரது ஆசையும். அப்போ மகிழ்ச்சி தானே வந்து விடுமா? அல்லது நாமாக அதை அடைய உழைக்க வேண்டுமா? சந்தேகம் எழ, மனோதத்துவ நிபுணர் தான் என்ன சொல்லுகிறார் எனப் பார்த்தேன்.

Happiness - A Psychiatric Education vd Journal of medical Ethics கூறுகிறது. மகிழ்வு ஒரு மனோ நிலை. அதனால், எமக்கு அது வரவேண்டும் என வாழ்த்துகிறோம்.



கார்த்திகா கணேசர்
(அவுஸ்திரேலியா)

மக்களை, நீங்கள் எப்போது சந்தோஷமாக இருப்பீர்கள் எனக் கேட்டால், நான் பணக்காரனானதும் சந்தோஷமாக இருப்பேன்','எனக்கு நல்ல வேலை கிடைத்ததும் சந்தோஷமாக இருப்பேன்', 'எனது பிள்ளை படித்து நல்லாக வந்தால் எனக்கு சந்தோஷம்' இவைதான் பெரும்பாலான பதில்களாக இருக்கும்.

அப்போ நாங்கள் இந்தக் கணம் சந்தோஷமாக இல்லையா? எல்லோரும் ஆரவாரித்து வாழ்த்துத் தெரிவித்த போது சந்தோஷம் வரவில்லையா? ஓ... இப்போ தெரிகிறது எமக்கு மேலே கூறிய அத்தனையையும் பற்றிய எண்ணம். இப்போ ஒத்துக் கொள்ள முடிகிறது எமக்கு சந்தோஷம் வர மேற்கூறியவைகள் எமக்குத் தேவை இல்லை. மாறாக நாமே தான் அவ்வாறு ஒரு கற்பனையைப் பண்ணிக் கொள்ளுகிறோம். சந்தோஷத்திற்கும் கையிருப்புக்கும் சம்பந்தம் கிடையாது. சந்தோஷம் ஒரு மன நிலை தான். நமக்குப் பிடித்ததை முழு மனதுடம் அனுபவித்துச் செய்யும் போது சந்தோஷம் தானே வரும்.

சந்தோஷத்திற்குக் குந்தகமாக இருப்பது கவலை. இதுவும் ஒரு மனோ நிலை தான். இந்த மனோ நிலை எப்போ எற்படுகிறது? 'ஐயோ நான் கஸ்ரப்படுகிறேன் என தன்னிலே தான் பச்சாதாபப் படும் போது' இந்தக் கவலை என்ற உணர்ச்சியை நாம் உணர்கிறோம். அதற்குத் தான் மகான்கள் எல்லோருமே 'சேவை செய்யுங்கள் உங்களிலும் அதிகம் கஸ்ரப்படுபவர்களுக்கு ஆறுதலாக இருங்கள்' என்று கூறியுள்ளார்கள். அதன் மூலம் ஓர் ஏகாந்த் விபரிக்க வொண்ணா அமைதியை அறிவீர்கள் என்கிறார்கள்.




கூடவே புது வருஷ சங்கல்பம் – Resolution – எடுப்பது இந் நாளில் சகஜம். அது காற்றுடன் பறப்பதும் சகஜம். இவ்வருடம் நான் 4 கிலோ எடை குறைப்பேன் புகைப்பிடிப்பதை நிறுத்தி விடுவேன் இவ்வாறாக அது தொடரும். ஆனால் இந்த சங்கல்பங்கள் எல்லாவற்றுக்கும் எடுக்கப்படும் சங்கற்பம் மட்டும் போதாது. அதற்கு உழைக்கவும் வேண்டும். உழைப்பதற்குத் திட்டம் வேண்டும் திட்டத்தை அமுல் படுத்த, அதை நெறிப்படுத்த, அதற்கான வழிமுறைகளை கண்டுபிடிக்க வேண்டும். பிறகு அதனை செயற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

மேலும், நாம் எல்லோரும் செய்யும் இன்னொரு விடயம் திட்டங்கள் எல்லாம் போட்டு வருட இறுதி வரும் போது, 'ஓ... இந்த வருடம் எத்தனை வேகமாகப் போய் விட்டது!' என்கிறோம். பூமி வெகு வேகமாக உருள அது என்ன கிறிக்கெற் பந்தா? எல்லோருக்குமே 24 மணி நேரங்கள் மட்டுமே தான் உண்டு. சாதனையாளர்கள் அவற்றைத் திட்டமிட்டு பயன் படுத்துகிறார்கள். மற்ற வேதனையாளர்கள் நேரத்துடன் இணைந்து அதனைப் பயன்படுத்துகிறார்கள்.

2023 எவ்வாறு அமைய வேண்டும் என்பது எம் கையில் தான். வாழ்த்துக்கள் எல்லாம் வருட ஆரம்பத்தில் தான். அதன் பின் எவ்வாறு வருடத்தைக் கொண்டு நடத்த வேண்டும்? அவை எல்லாம் நம் கை யில் தான். ஓ... மறந்து விட்டேன்.

"HAPPY NEW YEAR TO YOU"

பழக்க தோஷத்தால் வாயிலே ஆங்கில மொழியிலே வாழ்த்தும் சம்பிருதாயம் வந்து ஒட்டிக்கொண்டுவிட்டது. இப்போது தமிழிலே சொல்கிறேன்." புதுவருஷ வாழ்த்துக்கள்"

நண்பர்களே! உங்களிலே எனக்கு அக்கறை உண்டு. அதனாலே புது வருட வாழ்த்தைக் கூறி விடைபெற விரும்பவில்லை. வருடம் பூரா சிறப்பாக அமைய உழைப்போம் எனக்கூறி விடைபெறுவது கார்த்திகா கணேசர்.



அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்







# எங்களின் நிஜ சூரரைப் போற்றுவோம்!

எண்பதுகளில் "ஐடியா" வாசுவின் காலத்தில் தொடங்கிய வானில் பறக்கும் புலிகளின் முயற்சி, தொண்ணூறுகளின் மத்தியில் வெற்றி பெறத் தொடங்கியது.

இரணைமடுப் பகுதியில், காடழித்து விமான ஓடுபாதை அமைக்கும் வேலைகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, மறுவளம் கப்பல்களில் குட்டியான ரடவசய டபைாவ ரக விமானமும், பகுதி பகுதியாக வந்திறங்கியது.

சமுத்திரங்களைக் கடந்து கப்பல்களில் வந்திறங்கியது, விமானங்கள் மட்டுமல்ல, விமானங்களை இயக்குவதில் பயிற்சி பெற்ற விமானிகளும் தான்.

கடல் கடந்து, தாய்நாடு திரும்பிய விமானமோட்டிகள் இருவரும் ஐரோப்பிய நாடுகளில் வசதியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். கப்பலில் வந்த குட்டி விமானம் மேலெழத் தேவையான ஓடு தூரத்திற்கு அதிகமாகவே, 750 மீட்டர் தூரத்திற்கு, ஓடுபாதை அமைக்கப் பட்டதை, தற்செயலாக அந்த வழியாக வந்த இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் ஒன்று கண்டுவிட்டு, மிகவும் தாழப்பறந்து அவதானித்து விட்டுச் சென்ற சம்பவமும் நடந்தது.

1995ம் ஆண்டின் ஆரம்பகாலம் முதற் பறப்பிற்கு குறிக்கப்பட்ட நாளும் வந்தது. தமிழர் போராட்ட வரலாற்றில் மைல்கல்லாக விளங்கப் போகும் அந்த நாளில் காற்று பலமாக இருக்கக் கூடாது, காற்று பலமாக இருந்தால், குட்டி விமானம் பறப்பது கஷ்டம், என்று எதிர்பார்க்கப்பட்டது.

எதிர்பார்த்தது ஓன்றாக இருக்க, அன்று காற்று கொஞ்சம் பலமாகவே வீசிக் கொண்டிருந்தது. தேசியத் தலைவரோடு புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்கள் அநேகர் அந்த முதற் பறப்பைக் காண, இரணைமடுவில் ஒன்று கூடியிருந்ததால், அந்தப் பிரதேசத்தைச் சுற்றி பாதுகாப்பும் பலமாகவே இருந்தது. காற்று அடங்கி, விமானத்தை வெளியே கொண்டு வந்து, என்ஜினை இயக்கினால், விமானத்தின் என்ஜின் இயங்க மறுக்கிறது. இயங்க மறுத்த என்ஜினை புலிகளின் பொறியலாளர்கள் மீண்டும் இயக்க வைக்கிறார்கள். ஐரோப்பாவில் இருந்து வந்த இரு விமானமோட்டிகளில் ஒருவர், பிரதான விமானியின் ஆசனத்தில் வீற்றிருக்க, பின்னிருக்கையில் புலிகளின் முதலாவது வான்புலிகள் அணியில் இருந்த போராளியொருவர் வீடியோ கமராவோடு ஏறி அமருகிறார்.

முதலாவது வான்புலிகள் அணிக்கு, தாயகத்தின் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும், இருவரை இணைக்குமாறு, தேசியத் தலைவரால், வான்புலிகளின் பொறுப்பாளராக இருந்த சங்கருக்கு வழங்கப்பட்ட பணிப்புரை முழுமையாகவே நிறைவேற்றப்பட்டிருந்தது. 750 மீட்டர்கள் நீளமான விமான ஓடுபாதை இருக்க, புலிகளின் முதலாவது ultra light ரக விமானம் மேலெழுந்து பறக்க அவ்வளவு தூரம் தேவையாக இருக்கவில்லை. காற்றில், ஒரு பட்டத்தைப் போல, பறக்கத் தொடங்கிய விமானம் மேலெழுந்த உயரத்தில் இருந்து, முல்லைத் தீவு கடற்பரப்பு தெரிந்ததாம்.

பின் ஆசனத்தில் இருந்த வான் புலிப் போராளி, தான் சுமந்து சென்றிருந்த வீடியோ கமராவில் முதற் பறப்பிலிருந்து காட்சிகளைப் படம் பிடித்துக் கொண்டிருக்க, கிட்டத்தட்ட இருபது நிமிடங்கள் தமிழீழ வான்பரப்பில் பறந்த புலிகளின் முதலாவது விமானம், தனது பரீட்சார்த்தப் பறப்பை முடித்துக் கொண்டு, தரையிறங்கத் தயாரானது.



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

விமானத்தின் தரையிறக்கத்திற்கு வழிசமைக்க, பாரிய சிவப்புக் கொடிகளை, விசுக்கி காட்டி விமானத்தின் தரையிறக்கத்திற்கு வழிகாட்டவென, நான்கு வான்புலிப் போராளிகள், விமான ஓடுபாதையைச் சூழவிருந்த உயர்ந்த மரங்களில் ஏற்கனவே ஏறியிருந்தார்கள்.

உயரமான மரங்களில் ஏறி நின்று, சிவப்பு நிற கொடிகளை, வீசிக்காட்டிக் கொண்டிருந்த நான்கு வான்புலிகள், கட்டுப்பாட்டுக் கோபுரமாக செயற்பட,அந்தக் குட்டி விமானம் தனது பறக்கும் உயரத்தைக் குறைக்கத் தொடங்கியது.

விமானத்தின் என்ஜின் கொடுத்த வேகத்திற்கு, எதிர்பாராமல் வீசிக் கொண்டிருந்த பலமான காற்றும் இணைந்து கொள்ள, தாழ பறக்கத் தொடங்கிய விமானம், உயர்ந்த மரங்களை உரசிக் கொண்டே, தரையை நோக்கி வேகமாகப் பறந்து வந்து கொண்டிருந்தது.

உயரமான மரங்களை உரசிக் கொண்டு, வேகமாக வந்து, ஓடுபாதையில் பலமாகவே தரைதட்டிய விமானம், தரை தட்டிய வேகம் அளவுக்கு அதிகமாவே இருந்ததால், தரையில் bounce ஆகி, மீண்டும் வானில் பறக்கத் தொடங்கியது. யாரும் எதிர்பாராத இந்தத் திருப்பத்தை, பறப்பனுபவம் இல்லாத புலிகளின் விமானமோடி பதற்றப் படாமலே சமாளித்தார். பின்னிருக்கை சக விமானமோடியும் தனது வீடியோ கமராவை நிறுத்தி, பத்திரப்படுத்தி விட்டு, பிரதான விமானிக்கு உதவி செய்யத் தயாரானார்.



வானில் மீண்டும் சுற்றிச் சுழன்று வந்து, இரண்டாவது முறையாக, தரையிறங்க புலிகளின் முதலாவது விமானம் தயாரானது. மீண்டும் உயர்ந்த மரங்களில் ஏறி நின்ற நான்கு போராளிகள் சிவப்புக் கொடியை வீசி வீசிக் காட்ட, தரையில் நின்ற தலைமை கவலையோடு பார்த்து நிற்க, வேகத்தை குறைத்துக் கொண்டும், மீண்டும் உயர்ந்த மரங்களை உரசிக் கொண்டும், முதலாவது தரையிறக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, இரண்டாவது முறையாக, புலிகளின் முதலாவது பறப்பு முயற்சிக்கத் தொடங்கியது.பறக்கும் வேகம் குறைத்தாகி விட்டது, மரங்களிற்கு மேலால் சிவப்புக் கொடிகள் கண்ணுக்கு தெரியத் தொடங்கி விட்டது, மேகம் தொட்ட விமானத்திற்கு, உயர்ந்த மரங்களின் கொப்புகள் தொடு தூரத்தில் வந்து விட்டது, தரையிறங்கும் விமான ஓடுபாதையும் அண்மித்து விட்டது,

30 ஆம் பக்கம் பார்க்க...



UK
Karaoke For
All Of Events
DJ Services
Event Management
Quality Sounds
Music Therapy
DJ SRS Karaoke
மயக்கும் இசை ஒப்பற்ற தரமான ஒலி திறனுடன் எமது SRS கரோக்கி
புத்துணர்வுடன் உங்கள் திருமணங்கள் பூப்புனித நீராட்டு விழா பிறந்த நாள் கொண்டாட்டங்கள் அனைத்து மங்களகரமான விழாக்களையும் இன்ப மயமாக்க காத்திருக்கிறது.
உடனடியாக WhatsApp, Viber, IMO, SRS Ravishan என்ற முக நூல் messenger Clhf ஊடாக நீங்கள் தொடர்பு கொள்ளலாம் அல்லது தொலைபேசி இலக்கம்
தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Srs.Ravishan
(44) 07865 663960| www.srskaraoke.com

Wuppertal நகரில்...
Asia Lebensmittel
மாதத்தில் முதல் வாரத்தில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை மளிகைப்பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மரக்கறி வகைகளுக்கும் | கடல் உணவு வகைகளுக்கும் | இன்றே நாடுங்கள்
+49 176 62728598 | 020289012114


Kaiserstraße 16,
42329
Wuppertal,
Germany
தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# வெளிச்சம் எங்கே?

நள்ளிரவுச் சூரியன் நாட்டில் ஒரு குளிர்காலம்... அவள் காலையில் எழுந்ததும் கணவரிடம் சொன்னாள் ‘சூரியனைக் கண்டு எத்தனை வாரங்களாகி விட்டது, எனக்கு அவனைப் பார்க்க வேண்டும்’ என்று. எழும்ப விருப்பம் இல்லாமல் கட்டிலிலேயே கிடந்தாள்...மனம் நோய் பிடித்தது போல சினமாக இருந்தது.

அறைக்குள் எட்டிப்பார்த்த கணவர் உன்ரை சூரியன் வந்திருக்கிறான், வெளியே போய்விட்டு வாவேன் என்றார். ஆகா... என மனம் துள்ள கம்பளி உள்ளாடைகள், வெல்வேட் உடுப்பு, ஜக்கெற், தொப்பி, குளிர் காலக் காலணி, கையுறைகள் அணிந்து கொண்டாள்...

**கீதா ரவி (நோர்வே)**



பை போன்ற அமைப்பில் குளிர் தாங்குவதற்கான ஒரு பொருள் சக்கர நாற்காலியில் வைப்பதற்காக இருக்கிறது... அது இடுப்பு வரைக்கும் வரும். ஏனெனில் நடந்து அல்லது ஓடி செல்பவர்களை விட கால்களை அசைக்காமல் இருப்பவர்களைக் குளிர் வெகுவாகத் தாக்கும். அதுவும் பாதிக்கப்பட்ட கால்களை மேலும் தாக்கும்... அந்தப் பைக்குள் கால்களைத் திணித்துக் கொண்டு புகைப்படக் கருவியையும் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்...

வெண்பனி கொட்டி இருக்கவில்லை... ஆனால் குளிர் மைனஸ் இல் இருந்தது. சிறிது தூரம் செல்லவே கைகள் விறைக்கத் தொடங்கின. கடற்கரையை நோக்கி உட்பாதைகளால் சென்றாள்... சூரிய ஒளி பிரகாசித்தது... அதற்கு சமமாகக் குளிர் கொன்றது... மூக்கு, வாயையும் கழுத்தில் கட்டிய பஞ்சுத் துணியால் மூடினாள். ‘இந்தக் குளிரில் கஷ்டப்பட்டு வருகிறேன், ஏதாவது நல்ல காட்சி கொடுத்து விடுங்கள்’ எனக் கடவுளிடம் வேண்டினாள்.

தூரமாக ஒரு கடற்காகம் கடலில் மூழ்கி மூழ்கி மீன் கிடைக்குமா என முயற்சி செய்து கொண்டிருந்தது... சில வாத்துகள் சோம்பல் முறித்தபடியும் சில நீந்திய படியும் இருந்தன. மரங்களுக்கிடையே ஏதோ ஒரு பறவை பறக்க கொஞ்சம் நேரம் அங்கே காத்திருந்தாள். கைகள் கையுறைகளைத் தாண்டி ஊசிகளால் குத்துவது போல் வலி கொடுத்தது. பல வாரங்களுக்கு முதல் இரு தடவைகள் விழுந்த போது மடங்கிய வலக்கைச் சுட்டு விரலும் சின்னவிரலும் (மாறி விடும் என்ற நம்பிக்கையில் அவள் இன்னும் வைத்தியரிடம் செல்லவில்லை) விறைப்பூசி போடாமல் அறுவை சிகிச்சை செய்யப்படுவது போல உயிர் போக வலித்தன. கைகளை சூடேற்றினால் தான் மின்சக்கர நாற்காலியை ஒட்டலாம் போல தோன்றியது. கால்கள் திணித்த பைக்குள் கைகளையும் திணித்துக் கொண்டாள். திணிக்கும் போது விரல்கள் தட்டுப்பட உயிர் போய் வந்தது... கண்கள் கலங்கின...



சிறிது சூடேறியதும் படமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் வீடு சேர்ந்து போர்வைக்குள் புகுந்தால் போதுமெனத் தோன்ற வந்த வழியே திரும்பினாள். திரும்பும் போது மனைவியுடன் வந்த வெள்ளைக்கார மனிதர் ஒருவர் அகலக் கை விரித்துப் போஸ் கொடுத்து ‘என்னைத் தானே படம் பிடிக்கிறாய்’ என்று கேட்டு அழகாகச் சிரித்தார்... வலியை மறைத்தபடி பதிலுக்கு அவளும் சிரித்து வைத்தாள்... நல்ல படங்கள் கிடைக்க வாழ்த்துக்கள் என்று வாழ்த்தியபடி அவர்கள் கடந்து சென்றார்கள்...

இன்னும் சிறிது தூரம் செல்ல தனது நண்பிகளுடன் வந்த வெள்ளைக்கார ஆச்சி... ‘இந்தக் கால நிலையிலுமா படம் பிடிக்கிறாய்’ என்று சிரித்தபடி கேட்டார்... அவள் ‘ஆ.... சரியாகக் குளிக்கிறது’ என்று அவருக்குச், ‘சொன்னாள். அவர்’ சூரியன் மறைவதற்கிடையில் நீ வீடு செல்வது நல்லது என நான் நினைக்கிறேன்... இல்லையெனில் மேலும் குளிரும்’ என்று அறிவுறுத்தினார். அவருக்கு நன்றி கூறி விட்டு தொடர்ந்து அவள் பயணித்தாள்...

அடிபட்ட விரல்கள் உயிர் போக வலித்தன. ஒரு குதிரை லாயத்துக்கு கிட்ட வந்ததும் தா....ங்க முடியாத வலி மற்ற விரல்கள் விறைத்துப் போயின கண்ணீர் தன்னையறியாமல் ஓடியது. வண்டியை மேற்கொண்டு செலுத்த முடியவில்லை. நின்று மீண்டும் கால்கள் திணிக்கும் பையினுள் கைகளைத் திணித்துக் கொண்டாள்... மடியில் மூன்றரைக் கிலோ புகைப்படக்கருவியும் லென்சும் அதையும் பிடித்துக் கொள்ள வேண்டும்...

நரகவேதனை என்று சொல்வார்களே அதை முற்றாக அனுபவித்தபடி கண்களில் நீரோட நீல்ஆம்ஸ்ராங் தோற்றத்தில் வீடு வந்து சேர்ந்தாள். அன்றைய பயணத்தில் குளிர் தாங்கும் சக்தி வெகுவாகக் குறைந்து விட்டதென்பது மட்டும் அவளுக்கு நன்றாகப் புரிந்தது...

ஆறுதல் பரிசாக நல்ல படம் எதுவும் கிடைக்கவில்லை...





# 'கணுக்கால் சுளுக்கு' குதிநாண் (சவ்வு) அழற்சி

**கணுக்கால் சுளுக்கு, பயிற்சிகள், மருத்துவம்**

இது என்னடா குதிக்காலில் நாண் என்கிறீர்களா? விண் பூட்டி பட்டம் ஏற்றியது ஞாபகம் வரவில்லையா? அதில் நாண் இருந்திருக்குமே. அட அந்த விளையாட்டுத்தான் தெரியாவிட்டாலும் அர்ஜீணன் தனது வில்லிற்கு நாண் பூட்டியது கூடத் தெரியாதா?

இரண்டு முனைகளை இணைக்கும் கயிறு போன்றதை நாண் என்பார்கள். குதிக்காலில் என்ன நாண்? குதிக்கால் எலும்பைக் கல்கேனியம் (Calcaneum) என்பார்கள். முழங்காலிலிருந்து கீழ் நோக்கி வரும் கெண்டைக் கால் தசைகளை (Calf muscles) குதிக்கால் எலும்புடன் இணைக்கும் கடினமான சவ்வைத்தான் குதிநாண் (Achiles tendon) என்பார்கள். இந்தச் சவ்வில் ஏற்படும் அழற்சிதான் குதிநாண் அழற்சி. அதாவது கணுக்காலின் பின்புறமாக உள்ள தடித்த நார் போன்ற சவ்வில் ஏற்படும் அழற்சி.

## அறிகுறிகள்

கணுக்காலின் பின்புறமாக வலியுடன் சவ்வு இறுக்கமாக இருப்பதே முக்கிய அறிகுறியாகும். பொதுவாக இந்த வலியானது கடுமையற்றதாக ஆரம்பித்து படிப்படியாக அதிகரித்துச் செல்லும். காலையில் எழுந்திருக்கும்போது வேதனை அதிகமாக இருக்கும். மாறாக சிலருக்கு வலியானது நடக்கும்போது ஓடும்போது அல்லது பயிற்சிகள் செய்யும் போது தோன்றுவதுமுண்டு. சிலருக்கு ஓட ஆரம்பிக்கும்போது வலி இருக்கும் பின் ஓடும்போது தணிந்து ஓடி முடிந்த பின் தீவிர மாறுவதும் உண்டு.

படி ஏறுவது, கடைத்தெருவிற்கு செல்வது போன்ற நாளாந்த நடவடிக்கைகளைக் கூட இந்த நோய் பாதிக்கக் கூடும். ஆனால் ஒரு சிலருக்கு வலி கடுமையாக இருப்பதில்லை வலியுள்ள இடத்தில் கை வைத்துப் பார்த்தால் அங்கு குதிநாண் சவ்வானது சற்று வீங்கி திரணையாக இருப்பதை உணர்வீர்கள். சற்று அழுத்திப் பார்த்தால் வலி அதிகமாகும். குதிநாண் வலியானது எவருக்கும் ஏற்படக் கூடும். நூறு பேரை எடுத்துக் கொண்டால் அதில் ஆறு பேர் தமது வாழ்நாளில் எப்பொழுதாவது இந் நோயால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். ஆண்களில் அதிகம் என்கிறார்கள்.






இந்நோயால் அதிகம் பாதிப்புறுவது பொதுவாக விளையாட்டு வீரர்கள்தாம். கடுமையான உடற் பயிற்சிகள் செய்பவர்களிலும் வருவதுண்டு. பொதுவாக 30 முதல் 40 வயதானவர்களையே அதிகம் பாதிப்பதாக சொல்லப் பட்டபோதும் சற்று வயது கூடியவர்களில் அதிகமாக காணக் கூடியதாக இருக்கிறது. இந்த நோயை சரியாக நிர்ணயிக்க மருத்துவர்களுக்கு பரிசோதனைகள் எதுவும் தேவைப்படாது. தெளிவாகக் கேட்டறிவது தொட்டறிவது பேன்றவற்றுடன்கண்டுபிடித்துவிடுவார்கள். சிலதருணங்களில் ultrasound,scan, MRI,scan போன்றவை தேவைப்படும்.

## ஏன் ஏற்படுகிறது

இது ஏன் ஏற்படுகிறது என்பதைத் தெரிந்து கொண்டால் குணப்படுத்துவதும் அது ஏற்படாமல் தடுப்பதும் சுலபமாகும்.

மீண்டும் மீண்டும் குதிக்கால் நாணில் ஏற்படும் மிகச் சிறிய ஊறுகளின் தொடர்ச்சியாகவே வலியும் வீக்கமும் ஏற்படுவதாக நம்பப்படுகிறது. தேன்றிய சிறு ஊறுகள் குணமடைவதற்கு முன்னதாகவே ஏற்படும் மேலும் புதிய சிறு ஊறுகளின் ஒட்டுமொத்தமாகவே இந்நோய் தோன்றுகிறது.

**ஒருவரது எத்தகைய நடவடிக்கைகள் அவ்வாறான உறுகளை ஏற்படுத்துகிறது?**

அளவிற்கு அதிகமாக அதற்கு வேலை கொடுப்பதால் எனப் பொதுவாகச் சொல்லலாம். தினசரி ஓடுபவர்கள், நடனமாடுபவர்கள், டெனிஸ் போன்ற விளையாட்டுகளில் அடிக்கடி ஈடுபடுபவர்களை உதாரணம் காட்டலாம்.

பயிற்சிகள் செய்யும்போது அதற்குப் பொருத்தமான பாதஅணிகளை அணிவது காரணமாகலாம். மாறாக பயிற்சிகளின் போது அவதானிக்க வேண்டிய சரியான உத்தி முறைகளை அனுசரிக்காதது ஏறுமாறகச் செய்வதும் காரணமாகலாம்.அதேபோல பயிற்சிகள் செய்பவர்கள் அவற்றின் வேகத்தை திடீரென அதிகரிப்பது, அடிக்கடி செய்ய முனைவது போன்றவையாலும் தோன்றலாம். ஏற்றமான தரைகளில் பயிற்சி செய்வது மற்றொரு காரணமாகும். ஆனால் பலருக்கு தெளிவான காரணங்கள் தெரிவதில்லை. ஒரு சிலருக்கு அவர்களது பாதத்தின் இயல்பான வளைவானது அதிகமாக இருப்பதும் ஒரு காரணமாகும்.




சிலவகை மூட்டு வாதங்கள் உள்ளவர்களில் (ankylosing spondylitis,psoriatic arthritis) இது ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகும்.

## மருத்துவம்

உடனடியாக நீங்கள் செய்ய வேண்டியது என்ன? கடுமையான உடற் பயிற்சிகள் செய்பவராயின் அதனை நிறுத்தி குதிநாண் சவ்விற்கு சற்று ஓய்வு கொடுங்கள்.

28 ஆம் பக்கம் பார்க்க...



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்



மாதவி

# காற்று வடிக்கும் சிற்பங்கள்!

இயற்கை வடிக்கும் சிற்பங்கள், பல சமயங்களில் சிற்பி வடிக்கும் சிற்பத்தையும் மிஞ்சும் அளவுக்கு இருந்துவிடும்.

மனிதசக்தியைவிட, இயற்கையின்சக்திபல மடங்கு அதிகம் என்பது யாவரும் அறிந்ததே. சிற்பியின் சிற்பத்தை இரசிக்க சராசரி இரசனை உடையவர்களுக்கும் முடியும்.

ஆனால் இயற்கை வடிக்கும் சில சிற்பங்களை, இரசிப்பதற்கு ஒரு வகையான தேடுதலுடன் கூடிய இரசனை தேவை.

இயற்கை என்னும்போது, நீர், நிலம் ஆகாயம் காற்று, நெருப்பு. இவை தம் பரப்பில் நிலையானதும், நிலையற்றதுமான பல சிற்பங்களை ஒவ்வொரு கணமும் வடித்த வண்ணமே உள்ளன.

கடற்கரையில் பல பாறைகள் கடல் அரிப்பால் உருமாறி சிற்பங்கள் ஆகலாம், ஆகாயத்தில் மேக மூட்டங்கள் அழித்து, அழித்து, பல சிற்பம் ஓவியம் என தீட்டியும் வடித்தும், மகிழலாம். நெருப்பு அது வடிக்கும் சிற்பங்கள் வெப்பத்தில் உருகி கருகி அவை வேறு ஒரு இரகமாக பரிமளிக்கும்.

காற்று வடிக்கும் சிற்பங்கள், ஏதோ ஒரு ஊடகத்தை தன்வையப்படுத்தி அற்புதமான சிற்பங்களை உருவாக்கும்.





இந்த கட்டுரை காற்று வடிக்கும் சிற்பங்கள் பற்றியதாகவே அமைகிறது.

காற்று வடிக்கும் அழகிய சிற்பம் பாய்மரக்கப்பல்.

கப்பலில் உள்ள பாய்களில் காற்று புகுந்து தாக்கி அந்த பாய்மரத்தை அழகான ஒரு நிமி


ர்ந்து நிற்கும் சிற்பமாக மாற்றும். இந்த சிற்பம் 3 டி அல்ல 4 டி என்று கூடச் சொல்லலாம்.நான்கு பக்கத்தில் இருந்து பார்த்தாலும், பக்கத்திற்கு, பக்கம் அற்புதமாக இருக்கும் இச் சிற்பம். இன்று எத்தனை பெரிய கப்பல்கள் ஏன் ரைட்டானிக் கப்பலாகட்டும அந்த பாய்மரக்கப்பலுக்கு ஈடாகுமா? கடல் அலைக்கு ஒரு றிதம் இருக்கும், அதே றிதம் இந்த பாய்மரத்திலும் இருப்பதைக் காணலாம்.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் 1964ம் ஆண்டு வன்னியில் பெரும் புயல் வந்தது, இரவு இரவாக அடித்த புயலில் பல மரங்கள் சாய்ந்தன. காலை புயல் சற்று ஓய்ந்தபோது வெளியில் வந்து வாழைத்தோட்டத்தை பார்த்தல். ஒரு பெண் தலை சீவி முடித்ததுபோல் வாழையிலை நார் நாராக கிழிந்து வாழைமரத்தை பின்னிக்கிடந்தது.

பக்கம் பக்கம் நின்ற பனைமரமும், தென்னைமரமும் கட்டியணைக்க, பனை ஓலையும், தென்னோலையும், பின்னிப் பிணைந்து தம் நிலை மறந்து ஒன்றிப்போன ஒரு சிற்பமாக காட்சி தந்தன. எனக்கு இருக்கும் ஒரே கவலை! அந்தக்காலத்தில் என் கையில் ஏதோ ஒரு கமரா இல்லை என்பதே.

மனிதன் தன் உடலை அழகிய சிற்பமாக காற்றினாலும் ஆக்குகிறான். அதற்கு ஆடைகளும் துணை. காற்று இல்லை என்றால் செயற்கையான காற்றை ஏற்படுத்தி மனிதன் அதிசய சிற்பமாகிறான்.

இந்த அழகி உயிர் சிற்பத்திற்கு உயர்ந்த உதாரணம் நடிகை மர்லின் மன்றோ. மர்லின் மன்றோ என்றதுமே நினைவில் வருவது கீழ் இருந்து வரும் காற்று, உடையை மேலே உயர்த்த, உடை மேல் உயரா வண்ணம் கைகளால் மாறி மாறி பிடிக்க, பெண் பூவாக மலர்வதுபோல் ஒரு சிற்பத்தை காற்று வடிவமைக்கும்.



இதே நுட்பத்துடன் அன்று உள்ளத்தை அள்ளித்தா படத்தில்,

**அழகிய லைலா அவள்**
**இவளது ஸ்டைலா**
**சந்தன வெயிலா இவள்**
**மன்மத புயலா**
**அடடா பூவின்**
**மாநாடா ஓஹோ**
**அழகுக்கு இவள்தான்**
**தாய் நாடா**

என்ற பாடலுக்கு காற்றுக்கு உடை மேலே பறக்காவண்ணம் மர்லின் மன்றோ போல் நடிகை ரம்பா ஒரு சிற்பமாகினாள். இன்று எமது திரைப்படங்களில் கதாநாயகன், கதாநாயகி இவர்களின் முக்கிய காட்சிகளில் கமரா இருக்குதோ இல்லையோ காற்று மட்டும் செயற்கையாக என்றாலும் அடிக்கும்.

உலக அழகியாக இருந்தாலும் அவளை அழகிய ஒரு சிற்பமாக காட்ட காற்று உதவும். பறக்கும் தாவணி,

30 ஆம் பக்கம் பார்க்க...








அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்





# ஜதிபல்லக்கு

*வியப்புமிகு புத்திசையில்*
*வியத்தகுமென்*
*கவிதையினை வேந்த னேநின்*
*நயப்படுஸந் நிதிதனிலே நான்பாட*
*நீ கேட்டு நன்கு போற்றி,*
*ஜயப்பறைகள் சாற்றுவித்துச்*
*சாலுவைகள்*
*பொற்பைகள் ஜதிபல் லக்கு*
*வயப்பரிவா ரங்கள்முதற் பரிசளித்துப்*
*பல்லூழி வாழ்க நீயே.*

ஸ்ரீ எட்டயபுரம் மஹாராஜ ராஜேந்த்ர ஸ்ரீவெங்கடேசு ரெட்டப்ப பூபதிக்கு கவிராஜர் ஸ்ரீ சி.சுப்பிரமணிய பாரதி எழுதிய சீட்டுக்கவி , பாரதி பக்தரான வழக்கறிஞர் திரு ரவி கல்யாணராமன் அவர்களின் நெஞ்சத்தில் ஆழப்பதிந்ததன் விளைவு என்ன என்பதே இக்கட்டுரை.

அமிழ்தம் அமிழ்தம் அமிழ்தம் என்று இத்தரை மீதினில் அமர சுகம் தர, நின்பால் அத்தமிழ் கொணர்ந்தேன் என அவதரித்த பாரதியை சென்னிமேல் தாங்கி சாலப்பெருங்களி கொண்டு, சென்னை திருவல்லிக்கேணி பாரதி இல்லத்தின் அருகே முத்தமிழ் விரும்பிகள் நிறைந்து குழுமினர். ஆம் அன்று பாரதியின் பிறந்த நாள் 11.12.2022.

அங்கே தத்ரூபமாக வடித்தெடுத்த பாரதியின் சிலைக்கு மலர் மாலை அஞ்சலி செலுத்தி, சால்வை , பொற்பை என்பன சமர்ப்பிக்கப்படுகிறது. ஆடல் நங்கையர் மகிழ்வோடு பதமாட , இசைப்பிரியர்கள் பாரதி பாடல்களை கோஷமிட, கவிஞர்கள் உணர்வெழுக் கவி பாட, பாரதி வழித்தோன்றல்களும், பக்தர்களும், பேரறிவாளர்களும் புடை சூழ, தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்து பல்லக்கில் பாரதி பவனி வரும் அருங்காட்சியை கண்ணாரக் கண்டு கண்ணீர் மல்கி, ஆஹா ! அன்று அவர் கேட்டதை இன்று இவர் செய்கிறாரே ? என்ன நாம் கைமாறு செய்வோம் என ஸ்தம்பித்திருந்தேன். 1924 ஆம் ஆண்டு ஆரம்பித்து வெள்ளி விழா கண்ட பெருமையோடு ஏராளமான கலை, இலக்கிய பணி ஆற்றி வரும் வானவில் பண்பாட்டு மையத்தின் நிறுவனர் திரு ரவி கல்யாணராமன் அவர்கள் ஒவ்வொரு வருடமும் பாரதிக்கு ஜதி பல்லக்கு நிகழ்வினை பெரு விழாவாக பாரதியின் பிறந்த தினம் அன்று ஏற்பாடு செய்து , பாரதிக்கு மரியாதை செய்து வருகிறார்.

நமக்குத் தொழில் கவிதை, உன்னோடு நான் , மின்னற்சுவை, சொற்களுக்குள் ஏறிக்கொள், வள்ளுவரின் வாயிலில், இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு, காற்று வாங்கப் போனேன், என்ன தவம் செய்தேன், கானல் நீரைக் கடந்து , சொன்னதும் சொல்லாததும், அணையாத சுடரேற்றுவேன், மக்கள் பாடும் பாட்டு உள்ளிட்ட பல தமிழ் நூல்களையும், ஆங்கில மொழியில் நீதி நூல்கள் உள்ளிட்ட கவிதைகளையும் யாத்தவர்.

இவரது படைப்புக்களை முன்வைத்து இற்றைவரைக்கும் 90 கருத்தாடல் நிகழ்வுகள் வெவ்வேறுபட்ட பல பல்கலைக்கழகங்களினூடாக நடைபெற்றுள்ளன. பாடலாசிரியர், இசையமைப்பாளர், பாடகர் என பன்முகத் திறமையுடன் , ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலுமே தாமே பாடல்களை எழுதி , இசை அமைத்து, பாடி இறுவட்டாக வெளியிட்டுள்ளார்.



கலாசூரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)

இவரால் நடத்திவரும் ஜதிப்பல்லக்கு நிகழ்வில் ஈர்க்கப்பட்டவளாய் , நாமும் அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளியினூடாக 11.12.2019 அன்று பாரதி சமர்ப்பணமாக நடத்திய 'ஞால வெளியினிலே' என்னும் பாரதி மார்க்க அரங்கேற்றத்தில் இலங்கையில் பாரதிக்கு ஜதிபல்லக்கு சுமந்து வந்தோம். பாரதியின் கொள்ளுப்பெயரன் டாக்டர் ராஜ்குமார் பாரதி ஐயா இசை அமைத்து தலைமை தாங்கி நிகழ்வினை நடாத்தி வைத்தார்.

பரதத்தில் பாரதியைப் பாரினில் பரப்பிட பேரவா கொண்டு செயற்பட்டு வரும் அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளி , பாரதியின் நினைவு நூற்றாண்டு தினத்தில் உலகளாவிய ரீதியில் உள்ள 100 நடனக்கலைஞர்களை ஒன்றிணைத்து பாரதி 100 கூத்தர் 100 என இணைய வழியில் ஆற்றுகைப்படுத்தினோம். இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆதரவுடன் அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளி நடாத்திய அந்நிகழ்வில், பாரதியை தன் உயிரினில் ஏந்தி வாழும் வானவில் ரவி கல்யாணராமன் அவர்களுக்கு 'பாரதி ஏந்தல்' விருது அளித்து பெருமை கொண்டோம்.பொதுமுடக்க காலம் கடந்து இவ்வருட நிகழ்வில் இவ்விருதினை அவர் கரம் தழுவ கொணர்ந்து சேர்த்து மகிழ்ந்தோம்.

ஜயப்பறைகள் சாற்றுவித்துச் சாலுவைகள் பொற்பைகள் ஜதிபல்லக்கு, வயப்பரிவாரங்கள் முதற் பரிசளித்து பாரதியின் புகழ் தாங்கும் ஏந்தல். பாரதி சுடர் ஏற்றல், பாரதி விழாக்களை பிரமாண்டமான அளவில் நடத்தல், அரசுடன் இணைந்து பாரதிக்கான சமர்ப்பண நிகழ்வுகளை நடத்தல் என முத்தமிழால் பாரதியை ஆராதிக்கும் வான் புகழ் கொண்ட வானவில் ரவி அவர்கள் இவ்விருதினைப் பெறுவது பாரதியின் சித்தம்.

உலகெங்கணும் வாழ்கின்ற பாரதி பக்தர்கள் இன்பமுற்று அன்புடன் இணங்கி செயல் பல புரிய பாரதி அருள் வேண்டிப்பணிகிறேன்.

**வாழ்க பாரதி நாமம் !**
**வளர்க பாரதி புகழ் !**






AJ
ENTERTAINMENT
PRESENTS
Once Upon a Time
AFTER SHOW
Party
11pm - 4am
turbinenHALLE
10.06.2023
POWERED BY
tamil.de
portal • lifestyle • entertainment
MUSIC PARTNER
KBS Music
AN EVENT BY
EPIC MONKEYS
TICKETS: www.tamil.de



# தமிழர் பண்பாடும் கலாசாரமும்

உலகிலுள்ள பல பண்பாடுகளில் சிறந்ததும் முதன்மையானதுமாக தமிழ் பண்பாடு தமிழ் மக்களின் கலாச்சாரம் இருக்கின்றது.

மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்து வந்தார்கள்.

பண்டைப் பெரும்புகழ் உடையோமா? இல்லையா? பாருக்கு வீரத்தை சொன்னோமா? இல்லையா? எண்டிசை வாய்மையால் ஆண்டோமா இல்லையா?

என்று தமிழர் பெருமையை உலகறிய சொன்ன பாவேந்தர் பாரதிதாசனின் வரிகள் தமிழர்களின் தொன்மையான பண்பாட்டையும் கலாச்சாரங்களையும் எடுத்து காட்டுகிறது.

செம்மொழியாகிய எம்மொழியும் அதன் நீண்டிருக்கும் பண்பாடும் கலாச்சாரமும் உலகத்தார் கண்டு வியக்கும் அதிசயமாகும். பல்லாயிரம் மொழிகள் புவியில் இருந்தாலும் எத்திசையிலும் பெருமைகொண்ட மொழியான தமிழ் தனக்கென தனித்துவமான பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் கொண்டது.

இன்றைக்கு பல்லாயிர கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அதாவது சங்க காலங்களில் இருந்தே தமிழர்களின் தனித்துவமான பண்பாடும் அதனோடு சேர்ந்த வாழ்க்கை முறைகளையும் காண முடியும்.

தமிழர் கலாச்சாரம் பண்பாடு அருகிவரும் நிலை போன்ற விடயங்களை இக்கட்டுரை விளக்குகிறது.

## தமிழர் பண்பாடு

யாதுமூரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர் தர வாரா என்று பாடிய கணியன் பூங்குன்றனார் உலகத்துக்கே சமத்துவத்தை விதைக்கிறார். பண்பாடு எனப்படுவது அதாவது பயிர் விளைகின்ற நிலத்தை உழுது பண்படுத்துவது போல மக்கள் தம் வாழ்க்கையினை நெறிப்படுத்துவதே பண்பாடாகும் தமிழர் பண்பாடும் அத்தகையதே. அதாவது அறம் பொருள் இன்பம் வீடு என்கின்ற விடயங்களை பின்பற்றி வாழ்வதே வாழ்க்கை பண்பாடாகும்.

அறத்தின் வழி வாழுதல் தமிழர் பண்பாடாகும் இதனை வள்ளுவர் அழுக்காறு அவா வெகுழி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம் என்று தமிழ் பண்பாடு அறம் சார்ந்தது என்று உலகுக்கே எடுத்து காட்டுகிறார்.

வரவேற்றல் என்கிற பண்பாடு வந்தோரை வருக வருக என்றழைத்து இன்முகம் காட்டி வரவேற்று உண்ண உணவழித்து, உபசரித்தல், வாசல் வரை சென்று வழியனுப்பி வைத்தல் என்பன தமிழர்களின் தனித்துவமான பண்பாடுகளாகும்.

இவ்வாறு வந்தாரை வரவேற்று மகிழ்விக்கும் செய்திகள் வரலாற்றில் பாரி மன்னன், அதியமான் நெடுமானஞ்சி, சடையப்பவள்ளல் என்று வரலாறு தமிழர்களின் பண்பாட்டை எடுத்தியம்புகின்றன.

மேலும் இன்சொல் பேசுதல், பெண்களை மதித்தல், மூத்தோரை கனம் பண்ணல், பெற்றோரை மதித்தல், கற்றோரை வியந்து பார்த்தல், உயிர்களிடத்தில் அன்பு கொள்ளல், செய்நன்றி மறவாமை, காதல், நட்பு, கல்வி, போர், வீரம் என்று என்றைக்கும் மங்காத தனி பெருமை கொண்டது தமிழர் பண்பாடு என்றால் அது மிகையல்ல.

**திவ்யகுமாரி சின்னையா (இலங்கை)**



## தமிழர் கலாச்சாரம்

அன்று தொட்டே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய தமிழர்கள் முத்தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவர்கள் இயல், இசை, நாடகம் என ஆய கலைகள் அறுபத்தினான்கும் தமிழர்களின் கலாச்சாரத்தை பறை சாற்றுகின்றன

கலாச்சாரம் எனப்படுவது வாழ்வியல் பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள், கலைகள் போன்றவற்றின் மூலம் வெளிப்படும் மக்களின் பிரதிபலிப்பாகும். தமிழர்கள் வேட்டி சேலை எனும் ஆடை கலாச்சாரத்தை உடையவர்கள் இவர்கள் அதிகம் இந்து சமயம் சார்ந்தவர்கள் இவர்களது வாழ்வியல் வழிபாட்டு முறைகள் போன்றன அதிகளவான சடங்கு சம்பிரதாயங்களை கொண்டு காணப்படுகின்றன.

மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வரும் நிகழ்வுகள், திருமணம், புதுமனைபுகுதல், தொழில் ஆரம்பம் போன்ற நிகழ்வுகளை சுப நிகழ்வுகளாக கொண்டாடி தமது கலாச்சாரத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

அதிக தெய்வ நம்பிக்கை உடையவர்களாக விளங்கினர் தமிழர்கள் தமது பண்பாடு கலாச்சாரங்களை வெளிக்காட்டும் மாபெரும் கோவில்களை அமைத்திருந்தனர்.


இது தமிழர்களின் கட்டட கலை சிற்பக்கலை ஓவிய கலை, நாட்டிய கலை போன்ற கலைகளையும் இறை நம்பிக்கையையும் பல தலைமுறைகளை தாண்டி உலகத்துக்கே பறை சாற்றும் அதிசயங்களாகும்.

18 ஆம் பக்கம் பார்க்க...




# நமது வாழ்க்கையில் பல நடுப்பக்கங்கள் நம்மை வந்து சந்திக்கின்றன!







சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

நடுப்பக்கம் என்பது வசீகரமானது ! முன்பெல்லாம் பத்திரிகைகளை வாங்கினால் பெரும்பாலானவர்கள் முதலில் புரட்டிப் பார்ப்பது நடுப்பக்கமாகத் தான் இருக்கும். பத்திரிகைகளின் நடுப்பக்கத்தில் என்ன வருகிறது என்பதை வைத்தே அந்தப் பத்திரிகையின் தரத்தை நிர்ணயம் செய்வார்கள். அரைகுறை உடையுடன் கவர்ச்சிப் படம் இருந்தால், அது தரம் குறைந்த பத்திரிகை என்று சிந்தனை வாதிகள் ஒதுக்கி வைப்பார்கள். அதே பத்திரிகையை விடலைகள் விரும்பி வாங்குவார்கள்.

நடுப்பக்கம் என்பது நடுநிலமை. ஒரு கடிகாரத்தின் மையமே அதன் ஆரங்கள் அசைந்து திரிய உதவியாய் இருக்கிறது. ஒரு தராசின் நடுப் பாகமே அதன் நடுநிலை தவறாமையை பறைசாற்றுகிறது. அதனால் தான் எந்தப் பக்கமும் சாயாத சிந்தனையை நடுநிலை சிந்தனை என அழைக்கிறார்கள்.

நமது வாழ்க்கையில் பல நடுப்பக்கங்கள் நம்மை வந்து சந்திக்கின்றன. வயதின் பயணத்தில் ஓடித் திரிபவர்களை சட்டென நிறுத்தி அசரடிப்பதில் இந்த நடு வயதிற்கு முக்கிய பங்கு உண்டு. கேளிக்கைகளும், உற்சாகமும், பட்டாம்பூச்சி பறக்கும் இளமையும் முடிந்து போக முதுமையின் முற்றத்துக்குள் பாதம் எடுத்து வைக்கும் கணம் இந்த நடுவயதின் சிறப்பம்சம். இளமையில் உழைத்தவர்கள் நடுவயதில் நிம்மதியாய் இருக்கும் வாய்ப்புகள் அதிகம். சிறுவயதில் நிம்மதியாய் இருந்தவர்கள், நடு வயதில் கடுமையாய் உழைக்க வேண்டிய கட்டாயம் நிச்சயம்.

நடுநிலை சிந்தனை நமக்கு எப்போதுமே இருக்க வேண்டிய ஒரு விஷயம். ஆனால், உளவியல் என்ன சொல்கிறதென்றால், நடுநிலமை என்று ஒரு விஷயமே கிடையாது. ஒருவருடைய சிந்தனை இந்தப் பக்கம் சாயலாம், அல்லது அந்தப் பக்கம் சாயலாம். ஆனால் இரண்டுக்கும் இடையே நடுவில் ஒரு சிந்தனை என்று ஒன்று கிடையாது. வெங்காயத்தின் தோலை உரிப்பது போல உரித்துப் பார்த்துக் கொண்டே வந்தால், கடைசியில் ஒரு பக்கமாய் நம் தராசு சாய்ந்து கிடப்பதை அறியலாம்.

அம்மாவுக்கும், மனைவிக்கும் இடையே சண்டை நடக்கும்போது நடுநிலையாய் நிற்கிறேன் என ஒருவர் சொன்னால் அது பொய். வெளியே நடுநிலமையாய் காட்டிக் கொண்டாலும், உள்ளுக்குள் முட்டி மோதும் அவனது உணர்ச்சிப் போராட்டம் அவன் ஒருவருக் குச் சார்பாய் நிற்பவன் என்பதை உணர்த்தும். ‘நீங்களே பாத்துக்கோங்க‘ என சகஜமாய்க் கடந்து போவதாய்த் தோன்றினாலும், பிரச்சினை வேண்டாம் எனும் அவனது அடிப்படை முடிவே அங்கே வெளிப்படும்.



ஆனால், நடுநிலமையை நோக்கிய பயணம் சாத்தியமானதே. உதாரணமாக இரண்டு பேர் பிரச்சினைகளோடு நம்மிடம் வந்தால் இருவரும் பேசுவதை முழுமையாய்க் கேட்பதில் நமது நடுநிலமையை உணர்த்தலாம். ஒருவருடைய பேச்சை மட்டும் கேட்டு உடனே மனதுக்குள் ஒரு முடிவை எழுதிவிட்டால், அடுத்த நபர் பேசுவதையே நாம் உன்னிப்பாய்க் கேட்க மாட்டோம்.ஏற்கனவே முடிவெடுத்து வைத்திருப்பதை ஒட்டியே நமது சிந்தனை அலைபாயும். நடுநிலமையின் முதல் அம்சம், முழுமையாய் அறியாமல் ஒரு விஷயத்தை அணுகக் கூடாது என்பது தான்.

ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கம் இருப்பது போல, எந்த ஒரு செய்திக்கும் இரண்டு பக்கம் இருக்கும். எந்த ஒரு நியாயத்துக்கும் இரண்டு பக்கம் இருக்கும். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கோணத்தில் அணுக வேண்டும்.

திருட்டு – தவறு என அடித்துச் சொல்லும் நாம், பசியில் ஒரு குழந்தை ரொட்டி திருடுவதை திருட்டு என அழைத்து தண்டனை கொடுக்கக் கூடாது. அது மனிதத்தை மீறிய செயல். அந்தக் குழந்தையின் தேவையை சந்திக்க நம்மால் என்ன செய்ய முடியும் என்பதை சிந்திப்பது அங்கே நடுநிலமை ஆகிறது. காரணம், இங்கே மையைப்படுத்தப்பட வேண்டியது சட்டமல்ல, மனிதம். நமது வாழ்க்கையின் மையத்தில் எது இருக்கிறது. நமது வாழ்க்கை நூலின் நடுப்பக்கத்தில் எது எழுதப்பட்டிருக் கிறது என்பதை வைத்து நமது வாழ்க்கை எப்படிப்பட்டது, நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை முடிவு செய்து கொள்ளலாம்.

ஆன்மிக வாதிகளைப் பார்த்தால்,அவர்களுடைய மையத்தின் பரம் பொருளே அமர்ந்திருப்பார். அந்த மையத் திலிருந்தே அவரது வாழ்க்கைக்கான உத்வேகத்தை அவர் பெற்றுக் கொள்கிறார்.

17 ஆம் பக்கம் பார்க்க...



# நமது வாழ்க்கையில் பல நடுப்பக்கங்கள் நம்மை வந்து சந்திக்கின்றன!

கடவுளின் கருணை என்றோ, அருள் என்றோ, கடைக்கண் பார்வை என்றோ தான் அவர் தன்னுடைய வாழ்வின் நன்மைகளை அளவிடுகிறார். வான் வரை பறந்தாலும் தரையில் வந்து விழும் கவண் கல்லைப் போல, எங்கெங்கோ சுற்றினாலும் அவர் கடவுள் எனும் மையத்தில் வந்து சரணடைகிறார்.



போராளிகளைப் பார்த்தால் விடுதலை வேட்கை அவர்களுடைய மையமாக இருக்கும். நியாயமான உரிமைகள் மறுக்கப் படும்போது போராடவேண்டும் எனும் உத்வேகம் அவர்களிடம் கொப்பளிக்கும். அவர்கள் அந்த மையத்திலிருந்தே தங்கள் செயல்களுக்கான உறுதியைப் பெற்றெடுக்கிறார்கள். ஏழைகள் நசுக்கப் படும் போதும், மதத்தின் பெயராலும் இனத்தின் பெயராலும் மக்கள் துன்புறுத்தப்படும் போதும் அவர்கள் தங்கள் மையத்தை எட்டிப் பார்க்கிறார்கள். அடுத்த போராட்டத்துக்கான விதையை விதைக்கிறார்கள்.

மனிதநேய மனிதர்களைப் பார்த்தால், அவர்களுடைய மையம் நேசத்தினால் நிரம்பியிருக்கும். அவர்களுடைய கிளைகள் எங்கே பரவினாலும் அவை நேசத்தின் கனிகளையே விடுவிக்கும். அந்த கிளைகளுக்கான நீர், மையத்திலிருந்தே வேர்கள் வழியாய் இலைகளுக்குப் பரவும். எந்த ஒரு செயலைச் செய்யும் முன்பும் அவர்கள் தங்களுடைய மையத்தைக் கேட்பார்கள். இந்த செயலைச் செய்யலாமா வேண்டாமா ? எனும் கேள்வி அவர்களை வழிநடத்தும். எந்தச் செயல் மனிதத்தை மீறும் செயலாய் இருக்கிறதோ அதை அவர்கள் விட்டு விடுகிறார்கள். எது மனிதத்தை நோக்கிய பயணமோ அதை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

## நமது மையம் எங்கே இருக்கிறது!?

பணம் நமது மையமாய் மாறும்போது, நமது வாழ்வின் ஓட்டம் பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்திப் பயணிக்கிறது !

புகழ் நமது மையமாய் மாறும் போது, நமது வாழ்க்கை பிறருடைய பாராட்டு, அங்கீகாரம் என பயணிக்கிறது. போதை நமது. மையமாய் மாறும் போது, அதைத் தேடிய ஓட்டங்களே நமது வாழ்க்கையாய் மாறிப் போகிறது ! அன்பு நமது மையமாய் மாறும் போது, அன்பின் செயல்களை நோக்கிய பயணமே நம்மை வழிநடத்துகிறது ! நடுப்பக்கம் என்பது நமது வாழ்க்கையை தாங்கிப் பிடிக்கும் அச்சாணியைப் போன்றது. ஒரு வண்டிக்கு அச்சாணி எவ்வளவு தேவையோ, நமது மையம் அவ்வளவு முக்கியமானது. அந்த மையத்தை நாம் மனித நேயத்தால் நிரப்புவோம். மனித நேயத்தால் அமைகின்ற வாழ்க்கையே நடுநிலமையான வாழ்க்கை. அதுவே நடுப்பக்கம் போல அழகானது. அதுவே அன்பின் செயல்கள் அவனியெங்கும் பரவ துணை செய்யும். ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்வின் மையத்தை மனிதத்தின் கையில் ஒப்படைத்தால் அதன் பின் எழுகின்ற செயல்களால் பூமியின் பாதைகளெங்கும் மலர்கள் தூவப்படும். வெறுப்பும் துரத்தப்படும்.

நம்மைக் கவனிப்போம், நம் மையத்தைக் கவனிப்போம். சமூக,சாதீய வேறுபாடுகளைக் களைந்து அன்பில் ஒன்றிணைவோம்.

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்.**

# இப்படியும் சில மனிதர்கள்

சுருதி (அவுஸ்திரேலியா)



சாந்தி அரிச்சனை செய்வதற்கான பற்றுச்சீட்டுடன் வரிசையில் நின்றாள். ஆக்கள் வரிசையின் பின்னால் வந்து சேரச்சேர, பின்னோக்கி நகர்ந்து வரிசையின் கடைசியில் போய் நின்றாள். “அரிச்சனை செய்யவெண்டு வந்திட்டு, ஏன் பிள்ளை பின்னுக்குப் பின்னுக்குப் போய் பதுங்கிறீர்?” கொஞ்ச நேரமாக சாந்தியை அவதானித்திருந்த ஐயர் கேட்டார்.

“ஆக்கள் குறையட்டும் ஐயா!” “கோயிலிலை ஆக்கள் குறைவினம் எண்டு பாத்தா“ இண்டைக்கு நீர் அரிச்சனை செய்யமாட்டீர்.” சாந்தியை முன்னுக்கு வரும்படி கை காட்டினார் ஐயர். தயங்கியபடியே சாந்தி முன்னால் வந்து நின்றாள்.

“காதுக்குக் கிட்டக் குனிஞ்சு ரகசியமாப் பேரைச் சொல்லும்.” “கோவிட்டுக்கு ஒரு அரிச்சனை ஐயா”

ஐயர் வெலவெலத்துப் போனார்.

“கோவிட்டா” டேவிட்டா?” ஒருகணம் ஐயர் தன்னையே நொந்துகொண்டார். தன் காது மந்தமாகிவிட்டதாக உணர்ந்த ஐயர் தொடர்ந்து, “நட்சத்திரம் என்ன?” என்றார். “ஐயா” பிறந்த இடமே இன்னமும் சரியாத் தெரியேல்லை. அதுக்குள்ளை நாள் நட்சத்திரத்துக்கு நான் எங்கை போறது ஐயா” சும்மா பொதுவாச் செய்யுங்கோ!” “கோவிட் நாமதேசியாம்” கோவிட் என்ற சொல்லைச் சற்றே விழுங்கி மிகுதியை உரத்து அரிச்சனை நடந்தது.

அவுஸ்திரேலியா கோவில் ஒன்றில் பல நாட்களாக இந்த அரிச்சனை தொடந்து நடந்து வந்தது. கோவிட்டுக்கு இந்தப் பெண் ஏன் அரிச்சனை செய்யவேண்டும் என்ற கேள்வி ஐயர் மனதில் பல நாட்களாக உறுத்திக் கொண்டே இருந்தது.

ஒருநாள் திடுதிப்பாக சாந்தியை மரக்கறிச்சந்தையொன்றில் ஐயர் சந்தித்துக் கொண்டார். “பிள்ளை” கேக்கிறன் எண்டு குறை நினையாதையும். கொரோனாவுக்கு ஏன் அரிச்சனை செய்யவேணும்?”

“ஐயா” இந்தக் கொரோனாவாலை தான் என்ரை பிள்ளை டொக்ரருக்கே எடுபட்டுப் படிக்கின்றாள். கொரோனா வந்ததாலை சீனா, கொரியா போன்ற வெளிநாட்டு மாணவர்கள் இஞ்சை வந்து படிக்கிறது நிண்டு போச்சு. அவையளின்ரை இடத்துக்கு மாக்ஸ் கொஞ்சம் குறைவா இருக்கிற இஞ்சத்தைப் பிள்ளையள் எடுபட்டுப் படிக்கினம்.”

“அப்ப கொரோனா தொடர்ந்து நிலைச்சு இருக்க வேணும் எண்டு நினைச்சே நீர் அரிச்சனை செயயிறீர்?”

“பின்ன? நாங்கள் எவ்வளவு கஸ்டப்பட்டுப் பிள்ளையளைப் படிக்க வைக்கிறம். அவை ஈஷியா வந்து காசைக் கட்டிப் படிச்சுப்போட்டுப் போயிடுகினம்.” “என்ன எண்டாலும் உம்மை நான் மெச்சிறன். ஏன் எண்டா உம்முடைய பிள்ளை படிக்கிறதுக்கு எடுபட்ட பிறகும், மிச்சப் பிள்ளையளும் எடுபட்டுப் படிக்க வேணும் எண்டு நினைச்சு தொடர்ந்தும் அரிச்சனை செய்யிறீரே! ஆருக்கு இந்த மனசு வரும்.”

“அப்பிடியில்லை ஐயா” எனக்கு இன்னொரு பையன் இருக்கிறான். இப்ப பதினொராம் வகுப்புப் படிக்கிறான். அவன் லோயருக்குப் படிக்க எடுபட வேணும். அவன் படிக்க எடுபடும் வரைக்குமாவது இந்தக் கொரோனா நிலைச்சு நிக்க வேணும். அதுக்குப் பிறகு இந்த அரிச்சனை நிண்டிடும்.” சாந்தி சொல்ல ஐயரின் முகத்தில் அசடு வழிந்தது.


# வெற்றிமணி திருமண சேவை



நன்கு படித்த, Master முடித்த யோ்மனியில் Bonn நகரில் வேலை செய்யும் 1993 ம் ஆண்டு பிறந்த பெண்ணுக்கு (உயரம்171cm) சிறந்த மணமகன் தேவை Nordrhein-Westfalen மாநிலத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
அமரன் 01731833664



மணமகன் தேவை!

திருமண சேவையில் இணைந்து நீங்களே உங்களுக்கு ஏற்றவர்களைத் தேடிக்கொள்ளலாம்.
தரகுப்பணம் அறிவிடப்படமாட்டாது.

விளம்பரத்திற்கு மட்டும் அறவிடப்படும்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# தமிழர் பண்பாடும் கலாசாரமும்

தமிழ் நாட்டில் அமைந்துள்ள தஞ்சை பெருங்கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், தில்லை நடராஜர் கோவில் இவை போன்ற ஆயிர கணக்கான கோயில்கள் தமிழர் கலாச்சாரத்தை வெளிக்காட்டும் உலகமே வியந்து பார்க்கும் அதிசயங்கள் ஆகும்.

மேலும் மங்கல இசை வாத்தியங்களின் புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில், உடுக்கு, பறை, மணி மற்றும் சங்கு போன்ற இசைக்கருவிகள் தமிழர் கலாச்சார இசைக்கருவிகளாகும்.





தமிழில் எழுந்த ஒப்பற்ற இசைப் பாடல்கள் தமிழர்களின் இசை ஆர்வத்தை எடுத்து காட்டும்.

என்றும் பெருமை மிக்க சங்கப்பாடல்கள் ஐம்பெரும் காப்பியங்கள், பதினெண் கீழ் மேல் கணக்கு நூல்கள், கம்பராமாயணம் பல நூறு மாபெரும் இலக்கிய வரலாற்றை கொண்டவை.

தமிழ் கலாச்சாரம் நடனம், நாடகம், கூத்து போன்ற எம் மண்ணுக்குரிய கலைகளை கொண்டதுவே தமிழ் கலாச்சாரம் காதலும் வீரமும் அன்பும் இயற்கையும் மனிதமும் கலைகளும் ஒருங்கே சங்கமிக்கும் தமிழ் கலாச்சாரம் என்றைக்கும் பெருமைக்குரியதாகும்.

அருகி வரும் தமிழ் பண்பாடு கலாச்சாரம் இன்றைக்கு கலிகாலம் போல் தமிழும் இதன் பெருமை மிகு



பண்பாடும் கலாச்சாரமும் குறைந்தபடி இருப்பது வேதனைக்குரியதாகும்.

நாகரீக வளர்ச்சியும் பிறமொழி கலப்புக்களும் மேற்கத்தைய கலாச்சார ஊடுருவல்களும் இதற்கு காரணமாகும்.

இன்றைக்கு எம் மொழி என்று பெருமையாக சொல்லும் காலம் போய் ஆங்கிலம் பேசினால் பெருமை என்று நினைக்கிறார்கள். தமிழில் பேசினால் அவமானம் என்று கருதுகிறார்கள்.

இன்றைக்கு பிற மொழிகளை அரச மொழிகளாக மாற்றுவதனால் தமிழ் மொழியை விட்டு வேலை வாய்ப்பிற்காக கற்க வேண்டிய நிலை தமிழர்களுக்கு ஏற்படுகிறது.

இதனால் தாய்மொழியில் கல்வி கற்க வேண்டிய குழந்தைகள் கூட ஆங்கில மொழி மூலமான கல்விக்கு பெற்றோரால் திணிக்கப்படுகின்றனர். இன்றைக்கு தமிழர்களுக்கு தம் மொழி மீதான பற்று குறைவடைந்து போகிறது.

தமது பண்பாடுகளை பழக்க வழக்கங்களை மறந்து தவறான பாதையில் செல்கின்றனர்.

இந்நிலை தொடர கூடாது எமது மொழி பெருமைக்குரிய மொழி அதை பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

உலகுக்கே பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் சொல்லி கொடுத்த இனம் எப்போதும் எமது பெருமைகளை மறந்து விடக்கூடாது. அடுத்த தலைமுறைக்கும் இதை சொல்லி கொடுக்க நாம் தவற கூடாது.

எமது கலாச்சாரத்தின் ஆழத்தை கீழடியில் நிகழ்ந்த புதைபொருள் ஆய்வுகள் கூறும். தமிழ் என்று சொல்ல காற்றும் இசைமீட்டும்.

இருக்கின்ற பெருமைகளை கட்டி காப்பதும் அவற்றை தலைமுறை தாண்டி நிற்க செய்வதும் தமிழர்களான எம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

நம் தமிழின் பெருமையை பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழுக்கு அமுதென்று பெயர் இன்ப தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று பாடுகிறார்.

ஆதலால் எம் உயிரிலும் மேலான தமிழையும் அதன் கலாச்சாரத்தையும் பண்பாடுகளையும் காப்பது எம் கடமையாகும்.

அனைவருக்கும் தமிழர் பண்டிகையான உழவுத்திருநாள் நல் வாழ்த்துக்கள்..

**பொங்கலோ...... பொங்கல்.......**

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மனைவி என்பவள் வேலைக்காரி அல்ல!


இருக்க வேண்டும் என்று தினமும் காலை நேரத்தில் மனைவி நிஷேவிதாவுடன் ஒரு மோதல். மாலையில் தம்பதிகள் வெளியே போய்விட்டு வந்து 4ஆம் மாடிக்குப்போக மின்தூக்கியில் ஏறினால், அதே Blockஇல் வாழும் டீசவைவளா வெள்ளைக்காரன் "Hi" என்றபடி ஏறுவான்: 3ஆம் மாடியில் அந்த வெள்ளைக்காரன் இறங்கி நடக்கும்போது ஒரு அடி நின்று தம்பதிகளுக்கு சிரித்தபடி கைகாட்டி 'Bye' சொல்வான். இதெல்லாம் பொறாமைக்கார கணவர் சுரேனுக்கு ரத்தக்கொதிப்பு ஏற்படுத்தும் விஷயங்கள். கொதி காப்பியை தினமும் வாயில் ஊற்றுவதனால்தான் இந்தக் குணமோ? விடை தெரியாமல் திணறினாள் நிஷேவிதா. பாவம்!

வீட்டில் ஒருநாள் தொலைபேசி திருத்த British Telecom ஊழியர் (B.T) வந்தார். வயதில் குறைந்த தமிழ் இளைஞன். B.T தான் முதல் வேலை போலும். "தம்பி, Coffee குடிப்பீங்களா?" என்று கேட்டாள். கண்களில் ஆச்சரியத்தை காட்டியபடி "அக்கா, மணிக்கணக்காக நான் குளிரில் வேலை செய்து விட்டு வீட்டுக்குள் வந்தாலும் வெள்ளைக்கார கிழவியள் ஒரு கிளாஸ் தண்ணீர்கூட தராதுகள். நீங்கள் எங்கட நாடு, எங்கட இனம். எனக்கு சந்தோஷமாக இருக்கு அக்கா! உங்களுக்கு Telephone சம்பந்தமான என்ன வேலை இருந்தாலும் Extension Line அது இது என்ன தேவை என்றாலும் B.Tக்கு சொல்லாமல் எனக்கு Phone பண்ணுங்கள் என்று கூறிவிட்டு தனது B.T Cardஐ சமையல் அறை மேசையில் வைத்தான். காப்பியை



குடித்துவிட்டு வேலை முடிந்தபின் அந்த இளைஞன் புறப்பட்டான்.

மாலையில் சந்தேகப்பேய் சுரேன் வந்து B.T Cardia கண்டதும் "யார் இந்த சதீஷ்? உனக்கு ஏன் தன் Direct Phone நம்பர் தரவேண்டும்?" – விளக்கம் தந்து அவனுக்கு மேலும் ஆத்திரமூட்ட நிஷேவிதா விரும்பவில்லை. தன் தந்தையார், தன் அம்மாவை தினமும் இம்சிப்பதை சும்மா சந்தேகத்தில் துன்புறுத்துவதை மகன் ரிஷி கவனித்திருந்தான். "Why is dad is so rude அம்மா?" என்று கேட்டு தாயாரை கட்டி அணைத்துக் கொண்டான். பெற்றோரின் தப்பான நடத்தையினால், வளர்ப்பினால் கெட்டு குட்டிச்சுவராகி தந்தை சுரேன்போல தனது மகன் ரிஷியை வளரவிடுவதில்லை என்பதில் நிஷேவிதா உறுதியாக இருந்தாள்! அவன் யாரை விரும்புகிறானோ அவளையே திருமணம் செய்யட்டும். அவள் எனக்கு ஒரு புதல்வியாக நான் கருதி நடத்துவேன். "மனைவியின் மீது அன்புகாட்டி, அன்பினால் அவளை ஆளவேண்டும். அடிமையாக அல்ல" என்று மகனுக்கு ஊட்டி ஊட்டி வளர்த்து வருகிறாள் நிஷேவிதா.



# முதலில் எது வந்தது ; கோழியா அல்லது கோழிமுட்டையா?



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

இந்த உலகில் வாழும் நமக்கு இன்று வரை பல கேள்விகளுக்குப் பதிலே தெரியாது! உதாரணமாக: விண்வெளியில் எங்கேயாவது அன்னிய உயிரினங்கள், அதாவது ஏலியன்ஸ் இருக்கின்றனவா, அல்லது இந்தப் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது? இப்படி எத்தனையோ கேள்விகளுக்கு இன்று வரை பதில்களே கிடைக்கவில்லை. இதே போலத் தான் என்னையும் கொஞ்சக் காலமாக ஒரு கேள்வி போட்டு உறுத்திக் கொண்டே இருந்தது. உண்மை சொல்லப்போனால் அந்தக் கேள்வி என்னை மட்டும் இல்லை, இந்த உலகில் பலரை ஆட்டி வைத்தது. அது என்ன கேள்வி தெரியுமா? முதலில் வந்தது எது – கோழியா அல்லது முட்டையா? இது என்னடா கேள்வி என்று என்னிடம் கேட்பவர்களுக்கு இந்தக் கேள்வியில் இருக்கும் சிக்கல் புரியவில்லை என்று தான் சொல்லவேண்டும். எனவே அது என்ன சிக்கல் என்றும், இந்தக் கேள்விக்குரிய பதிலையும் அறிய விரும்பினால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்!

சரி, முதலில் கோழியா அல்லது கோழி முட்டையா வந்தது? இந்தக் கேள்வியில் இருக்கும் சிக்கல் என்னவென்று பார்ப்போம். ஒருகோழிமுட்டை ஒரு கோழியில் இருந்து வருகின்றது என்று எடுத்துக்கொள்வோம். அப்படி என்றால், அந்தக் கோழிமுட்டையை இட்ட கோழி எதில் இருந்து வந்தது? அதுவும் ஒரு கோழிமுட்டையில் இருந்து தானே வந்திருக்க வேண்டும்? அப்படி என்றால் அந்தக் கோழி இருந்த கோழிமுட்டை எதில் இருந்து வந்திருக்கும்? என்ன நண்பக்ரளே, இதில் இருக்கும் சிக்கல் புரிந்துவிட்டதா? இந்தக் கேள்வியை நாங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே போகலாம். எனவே, முதலில் எது வந்தது? கோழியா இல்லை கோழிமுட்டையா? இதற்கு அறிவியல் ரீதியான பதில் என்ன?

கோழி தான் முதலில் வந்தது என்று எடுத்துக்கொள்வோம். ஆராய்ச்சியாளர்கள் என்ன கண்டுபிடித்துள்ளார்கள் என்றால், கோழிமுட்டையின் கோது உருவாக்குவதற்குத் தேவைப்படும் OV-17 எனும் புரதம், கோழியில் மட்டும் தான் கிடைக்கிறது என்று. எனவே ஒரு கோழி இருந்தால் மட்டும் தான் அது OV-17 ஊடாக முட்டைக் கோதையும் அத்துடன் கோழி முட்டையையும் இட முடியும். எனவே, கோழி தானே முதலில் வந்து முட்டையை இட்டது?

ஹ்ம்ம் இது சரியாக இருக்கலாம் போலத் தான் இருக்கிறது, ஆனால் பொறுத்திருங்கள்! இதே விஷயத்தை வேறு மாதிரியும் சிந்தித்துப்பார்ப்போம். முதலில் முட்டை தான் வந்தது என்று எடுத்துக்கொள்வோம். பொதுவாக இனப் பெருக்கத்தின் போது இரு உயிரினங்களின் டி.என்.ஏ மூலக்கூறுகள் இரட்டித்துப் பெருகி சந்ததிகளுக்குக் கடத்தப்படுகிறது. இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், அப்படி இரட்டித்துப் பெருகும்போது, அந்த டீ.என்.ஏ. சில சமயங்களில் முழுவதும் இரட்டிப்பதில்லை. அது சிறிய மாற்றங்களுடன் இரட்டிப்பதைக் காணலாம். இப்படிப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளில் ஒரு உயிரினத்தின் டீ.என்.ஏ. மாறுபட்டுத் தான் புதிய புதிய உயிரினங்கள் உருவாகின்றன. எனவே, முன்னொரு காலத்தில் வாழ்ந்த கோழி போன்ற ஓர் உயிரினத்தின் டீ.என்.ஏ. மாற்றமடைந்து தான் இன்று நமக்குத் தெரிந்த கோழியினம் உருவாகியிருக்கிறது. சரி, இது கொஞ்சம் குழப்பமாக இருக்கலாம், எனவே ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். அந்த முன்னொரு காலத்தில் வாழ்ந்த கோழி போன்ற உயிரினத்திற்கு ஒரு பெயர் வைக்கலாம். அதை முற்கோழி என்று அழைப்போம். எனவே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக முற்கோழிகள் இடும் முட்டைகளில் டீ.என்.ஏ. மாற்றம் அடைந்து, கடைசியில் அந்த முட்டையில் இருந்து நாம் இன்று காணும் கோழி வெளியே வந்து விட்டது. இப்படிப் பார்த்தால், முதலில் வந்தது முட்டை தானே?



ஐயையோ... வழக்கம் போல் குழப்ப ஆரம்பித்து விட்டேனா? சரி பரவாயில்லை, இருக்கட்டும். இதைப் பற்றிக் கொஞ்ச நொடிகளில் பார்ப்போம். நான் இவ்வளவு நேரமும் முட்டை பற்றிக் கூறினேனே, ஆனால் இதில் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. உண்மையில் கோழிமுட்டை என்பது என்ன? ஒரு கோழி இடும் முட்டையையா கோழிமுட்டை என்கிறோம், அல்லது ஒரு முட்டைக்குள் கோழி இருந்தால் தானா அதைக் கோழிமுட்டை என்கிறோம்? என்ன நண்பர்களே புரியவில்லையா? சரி, இப்படிப் பார்ப்போம். ஒரு குரங்கு முட்டை இடுகிறது என்று எடுத்துக்கொள்வோம். அந்த முட்டையில் இருந்து ஒரு யானை வெளியே வந்தால், அந்த முட்டையைக் குரங்குமுட்டை என்று அழைப்போமா, அல்லது யானை முட்டை என்று அழைப்போமா? இப்போது வித்தியாசம் புரிகிறதா? சரி, இதற்கும் நான் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கும் என்ன ஒற்றுமை என்று கேட்கிறீர்களா? இதை வைத்துத் தான் இந்தக் கேள்விக்கே பதில் சொல்லப்போகிறேன். அதற்கு நாங்கள் இந்தப் பிரச்சனையை இரு பார்வையில் இருந்து பார்க்கவேண்டும்.

முதலாவது பார்வை என்னவென்றால், முன்னொரு காலத்தில் முற்கோழி, முற்கோழிமுட்டையை இட்டது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் டீ.என்.ஏ. மாற்றம் அடைந்து முற்கோழிகள் இட்ட முற்கோழிமுட்டையில் இருந்து ஒருகோழி வெளியே வந்து விட்டது. அப்படி வந்த கோழி கோழிமுட்டையை இட்டது. எனவே, அந்தக் கோழி, முற்கோழிமுட்டையில் இருந்து வெளியே வந்த காரணத்தால், கோழி தான் கோழிமுட்டைக்கு முதலில் வந்தது.

இரண்டாவது பார்வை: முன்னொரு காலத்தில் முற்கோழிமுட்டை இட்ட முற்கோழி ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் கோழிமுட்டை இட்டு அதில் இருந்து கோழி வெளியே வந்து விட்டது. எனவே, அந்தக் கோழி கோழிமுட்டையில் இருந்து வெளியே வந்த காரணத்தால் கோழிமுட்டை தான் முதலில் வந்தது.

நண்பர்களே, இந்த இரு பார்வைகளிலும் நீங்கள் ஒரு விஷயத்தைக் கவனித்தீர்களா? இதில் இருக்கும் ஒற்றுமை உங்களுக்குப் புரிந்துவிட்டதா? அது என்ன ஒற்றுமை என்றால், இரு பார்வைகளிலும் கடைசியில் வருவது கோழி தான்! அதில் எந்த விதமான மாற்றுக்கருத்துமே இல்லை! முதலாவது பார்வையில் முற்கோழிமுட்டையில் இருந்து கோழி வருகிறது. இரண்டாவது பார்வையில் கோழிமுட்டையில் இருந்து கோழி வருகிறது. இரண்டிலுமே முட்டையில் இருந்து தான் கோழி வந்திருக்கிறது! எனவே நான் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு, அதாவது முதலில் கோழியா அல்லது முட்டையா வந்தது என்கிற கேள்விக்கு அறிவியல் ரீதியான பதில்:

கோழிக்கு முதல் முட்டை தான் வந்தது!

சரி சரி, நீங்கள் எல்லோருமே என்ன நினைக்கின்றீர்கள் என்று எனக்கு நல்லாவே புரிகின்றது, போதுமடா சாமி, இனி நான் முட்டையே சாப்பிட மாட்டேன் என்று தானே யோசிக்கின்றீர்கள்?

என்ன நண்பர்களே, இந்த விஷயம் உங்களுக்குமுன்பே தெரிந்ததா? இல்லை, இன்று தானா இதை அறிந்துகொண்டீர்கள்? ■



# விட்டல சாயி பாபா ஆலயம்

Vittala Sai Baba Aalayam – Münster-Germany

ஒவ்வொரு வியாழன் மதியம் 12 மணிக்கும் மாலை 17 மணிக்கும் மற்றும்
ஒவ்வொரு மாத கடைசி ஞாயிறு மதியம் 12 மணிக்கும் பூஜை நடைபெறும்

புதுவருடம் மாலை 17 மணிக்கு பூஜை நடைபெறும்

(Seeradi) Vittala Sai Baba Aalayam
An der Hansalinie 38, 59387 Ascheberg
Münster-Germany

Tel.Nr.: 01741584315



அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main



Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425




கௌசி (யேர்மனி)

# நட்பின் இலக்கணம் இலக்கியங்களில் மட்டுமா!

மனித வாழ்க்கையிலே உள்ள உறவு முறைகளிலே நட்பு என்னும் உறவே மிதமாகப் பேசப்படுகின்றது. பெற்றோரிடம் மனைவியிடம் கூறத் தயங்கும் விடயங்களைத் துணிந்து நண்பர்களிடம் உரைக்கின்ற வழக்கம் பரந்த உலகம் முழுவதிலும் அனைத்து மனித வர்க்கத்திடமும் இருக்கின்றது. நண்பன் தனக்காக எதையும் விட்டுக் கொடுப்பான் தன்னுடைய உயிரையும் தருவான். தன்னுடைய இரகசியத்தைக் காப்பாற்றுவான் என்னும் நம்பிக்கைகள் இருந்து வருகின்றது. இந்த வழக்கம் தற்காலத்தில் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றதா என்பதும் இலக்கியத்தில் நட்பு எவ்வாறு கொண்டாடப்பட்டது என்பதும் ஆராயப் புகுந்தால் கால மாற்றத்திற்கேற்ப இலத்திரனியல் உலகில் மனங்கள் அந்தப் பண்புகளை மறந்து விடுகின்றார்கள் என்பதே உண்மை. இலக்கியத்தில் உண்மை நட்பு இருக்கின்றது. ஆனால், நடைமுறை வாழ்க்கையில் இருக்கின்றதா என்றால் அது இருக்கின்றது ஆனால், கேள்விக்குறியாகவே இருக்கின்றது

தளபதி திரைப் படத்திலே பாசம் வைக்க நேசம் வைக்கத் தோழன் உண்டு வாழ வைக்க, அவனைத் தவிர உறவுக்காரன் யாரும் இங்கில்லே. உள்ள மட்டும் நானே, உசிரைக் கூடத்தானே என் நண்பன் கேட்டால் வாங்கிக்கன்னு சொல்லுவேன். நட்பைக்கூடக் கற்பைப் போல எண்ணுவேன். என்னும் பாடலாசிரியர் வாலி அவர்களின் வரிகளிலே நண்பன் என்பவன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை மனதிலே கொண்டு வந்து பதிக்கின்றார். நட்பாலே நெஞ்சைத் தைத்து, ஒரு விழி அழ மறு விழியாய் அழுத நட்புக்களும், ஒரு பருக்கைச் சோறும் தட்டில் இல்லாது வழித்து வழித்து உணவுண்டு, விரல்கள் வறண்டு போகும் வரை பேசிப் பேசிச் சிரித்து ஆட்டம் போட்ட நட்புகள் போன இடம் இன்று தெரியவில்லை. அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்து நண்பர்களின் இறுக்கத்தை நினைத்து ஏங்க வைக்கும் காலமாக இக்காலம் விளங்குகிறது.

இன்பத்திலும் துன்பத்திலும் அருகிலே இருக்கும் ஒரு உறவு நட்புறவு. அந்த நட்புக்கு இலக்கணம் வகுக்கும் வள்ளுவர் ஆடை விழுகின்ற போது ஓடிச் சென்று அந்த ஆடையைப் பற்றுகின்ற கைகளைப்





போல நண்பர்கள் இருக்க வேண்டும் என்கிறார். நட்பின் முக்கியத்துவம் கருதி நட்பு, நட்பு ஆராய்தல், தீ நட்பு, கூடா நட்பு பழைமை என்று 5 அதிகாரங்களுக்குள் அறிவுரைகளை அள்ளிக் கொட்டியிருக்கின்றார். அக்காலத்திலும் இக்காலத்து நட்புப் போல் அதிகமாக இருந்திருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது. அறிவுக்கும் நட்புக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அறிவுடையவர்களுடைய உறவு வளர்பிறையைப் போல வளர்ந்து கொண்டே போகும். நாளும் நல்ல செய்திகளையும் அறிவுப் பரிமாற்றங்களையும் செய்கின்ற போது அதன் வளர்ச்சி பல்கிப் பெருகும். ஆனால், பேதையர் நட்பு தேய்ந்து போய் நின்று விடுவதை இலக்கியக் கூற்றாக மட்டுமன்றி இன்றும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

நட்பின் இலக்கணம் கூற விழைந்த ஔவையாரும் குளம் வற்றி நீரின்றி கவலையுடன் இருக்கும் குளத்தை ஒட்டி உறவாடிய பறவைகள் நாடி வருவதில்லை. அதே போல உண்மை நண்பன் என்று உறவாடிய நண்பர்கள், தேவையில்லை என்று அறிந்தவுடன் விலகிச் செல்வதை உண்மை நட்பின் இலக்கணம் இல்லை என்று ஔவை எடுத்துரைக்கின்றார்.ஆனால், அக்குளத்தினுடனே இருந்து கொடிகளும், ஆம்பலும், நெய்தலும், வாடி வதங்கும் அவ்வாறுதான் உண்மை நட்பு என்றும் கூடவே இருக்கும். என்று நட்புப் பற்றி ஔவையார் கூறுகின்றார்.

> **கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை**
> **இடையாயார் தெங்கின் அனையர் தலையாயார்**
> **எண்ணரும் பெண்ணை போன்று இட்டஞான்று**
> **இட்டதே தொன்மையுடையார் தொட**

என நாலடியார் 3 வகையான நண்பர்களை எமக்கு இனம் காட்டுகிறார். பாக்கு மரத்துக்கு தண்ணீர் விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். எப்போதும் உதவி செய்து கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறான நட்புக்கு உதவி பண உதவி மாத்திரமல்ல என்பதே இங்கு எடுத்துக் காட்டவேண்டிய விடயமாக இருக்கின்றது. எப்போதும் உதவி கேட்டு நீதான் உலகத்திலேயே சிறந்த நண்பன் என்பவர்கள். ஒருநாள் கிடைக்கவில்லை என்றால், அக்காலத்தில் ஊர் முழுவதும் ஆனால், இக்காலத்தில் உலகம் முழுவதும் மூடாத வாயாக வட்சப் அழைப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கும். வசை புராணம் பாடி அடுத்தவர்களிடம் அந்த நபரில் இருந்த நன்மதிப்பைப் பிடிங்கி எடுத்துவிடுவார்கள். ஆனால், தென்னைமரம் தினமும் இல்லா விட்டாலும் அடிக்கடி நீர் விட்டால் தன்னை எம்மோடு இணைத்து வைத்துக் கொள்ளும். ஆனால் பனை இருக்கிறதே விதையிடும் போது நீர் விட்டால் போதும் அந்த அடிப்படை அறிவை வைத்துக் கொண்டு காலம் முழுவதும் தானாக நீர் பெற்றுப் பயனைத் தரும். முதன்முதல் கண்டபோது ஏற்பட்ட உணர்வு எவ்வித எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் காலம் முழுவதும் புத்தம் புது மலர் போல மலர்ந்து கொண்டே இருக்கும். இவ்வாறான நட்பைப் பெறுவது அரிது. பெற்றால் பிரிவது அரிது. மனதால் தேடுவதும் தற்காலத்தில் தேடிக் கிடைக்காததும் இவ்வாறான நட்பே ஆகும்.

இலக்கிய காலத்திலே ஔையார் அதியமான், கர்ணன் துரியோதனன், கோப்பருஞ்சோழன் பிசிராந்தையார், பாரி கபிலர் போன்றோர் நட்பை இலக்கியங்களிலே மன்னனுக்கும் புலவர்களுக்கும் இடையிலே இருந்த சிறப்பினை நாம் அறிந்திக்கின்றோம். அதேபோல், மணிமேகலைக்கு சுதமதியும், மாதவிக்கு வசந் மாலையும், கண்ணகிக்கு தேவந்தியும் காப்பியத் தோழிகளாக இருந்தனர். சங்ககாலப் பாடல்களிலே குடிமக்களிடத்தில் தோழமை உறவை எடுத்துப் பார்க்கும் போது தலைவிக்கும் தலைவனுக்கும் இடையிலே ஏற்படும் கற்பொழுக்கம், களவொழுக்கம் ஆகிய இரண்டிலும் தோழியின் பங்கு அளப்பெரியது. தோழி என்பவள் தலைவியின் வளர்ப்புத்தாயாகிய செவிலித்தாயின் மகளே ஆவாள். சிறுவயதில் இருந்து ஒன்றாகவே வளருகின்றார்கள். தலைவனுடன் தலைவி காதல் வசப்படுகின்ற போது அக்காதலுக்குத் தூதாக வருபவளும், தலைவியின் குரலாக இருப்பவளும் தோழியே. அவளுக்கு நேர்மையாகவும், கண்டிப்பாகவும்,அறிவுரை போதிப்பவளும் அவளே. தலைவனுடைய செயல்களை எப்போதுமே சந்தேகக் கண் கொண்டே நோக்குவாள். தலைவனும் தலைவியும் திருமணம் செய்து வாழுகின்ற கற்பொழுக்கத்திலே


28 ஆம் பக்கம் பார்க்க...







அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்





# பெயர் என்பது வெறும் பெயரல்ல



கவிதா லட்சுமி
(நோர்வே)

ஒரு மனிதனுடைய பெயர் என்பது வெறும் பெயரல்ல. அது ஒரு பெயராக மட்டும் மனதில் பதிவதில்லை. அது உடலுக்கும் உயிருக்குமான அடையாளம் என்பதுகூட அல்ல. மனிதனுடைய செயற்பாடுகளினதும், செயற்பாட்டின் வினைகளாலும் அது கட்டியெழுப்பப்படுகிறது. பெயர்கள் எமது உணர்வலைகளைக் தட்டியெழுப்பக் கூடியவை. ஒவ்வொருவருக்கும் சில பெயர்கள் மனிதில் பதிந்துவிடும். சில பெயர்களின் மேல் ஒதுவித ஈர்ப்பு ஏற்பட்டிருக்கும்.

இந்தப் பெயர்களைப் பற்றியெல்லாம் நான் அதிகம் சிந்தித்ததில்லை. இருந்தும் பல வருடங்களாக எனக்குள் ஒருவித கிளர்ச்சியை, இனம் தெரியாத ஈர்ப்பை, ஒரு நேசத்தை ஒரு பெயர் ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றது. சுற்றி வளைக்காமல் சொல்வதென்றால் எனக்கு அந்தப்பெயரின் மேல் பெருங்காதல். பல காலங்கள் கடந்தும் அந்தப் பெயரின் மேல் உள்ள மயக்கநிலையின் அளவு அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது என்பது மிகையல்ல.

அவன் ஒரு ஓவியன்.

அவனுடைய ஓவியங்களை இணையத்தளங்களில் பார்ப்பதென்பது எனக்கு ஒரு போதை. இந்த உலகத்தில் அவனைவிட பெரும் ஓவியர்கள் இருந்திருக்கலாம். பல ஓவியங்கள் உலகப்புகழ் கொண்டிருக்கலாம், அதுபற்றி நான் அறிய மாட்டேன். ஓவியங்கள் பற்றிய எனது அறிவு மட்டுப்படுத்தப்பட்டதே. எனக்கு அவனது ஓவியங்கள் கிள்ளிவிட்ட உணர்வலைகளை வேறு ஓவியங்கள் தரவில்லை என்பது எனது தவறல்லவே. தற்போதுகூட அவனை இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருமையில் அழைப்பதென்பது அவனோடு எனக்குள்ள உரிமையை உரைப்பதற்காக இருக்கலாம்.

அவனது ஓவியங்கள் கவிதையோடு கூடியவை. இது கவிதை மட்டுமல்ல அழகுணர்ச்சியின் உச்சத்தை வர்ணங்களில் காண்பது இது. ஒளிக்கதிர்களின் அரங்கம் இது. வெறும் வர்ணங்களால் ஆனவைபோலல்லாமல் கதைபேசும் கண்களையுடையவை. அவனது கைகளில் கடவுளர்களெல்லாம் ஜனனம் செய்தார்கள். இணையத்தில் மட்டுமே பார்த்து பரவசமடையும் எனக்கு அவனுடைய ஓவியங்களை நேரிடையாகக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தால்? கிடைத்தது.

ஓவியக்கண்காட்சி மண்டபத்திற்கு போவதென்றவுடனேயே பல கனவுகளோடும் புகைப்படக் கருவியோடும், நானும் நண்பர்களும் சென்றோம். ஆரம்பத்திலயே புகைப்படம் எடுக்கும் கருவியை தடையென்று காவலர்கள் வாங்கி வைத்தது ஏமாற்றத்தைத் தந்தாலும் எனது ஆர்வம் சற்றும் குறையவில்லை. கண்களும், இதயமும் போதாதா பதியவைத்துக்கொள்ள? நான் தற்போது இருப்பது மைசூர். கண்காட்சி மண்டபத்தில் பல ஓவியர்களுடைய படைப்புகள் காட்சிப்படுத் தப்பட்டிருந்தன. அனேக ஓவியங்கள் மைசூர் ராஜவாரிசுகளின் ஓவியங்களாக இருந்தன. என்னோடு வந்தவர்கள் என்னைவிட பெரும் கலையார்வம் கொண்வர்கள் ஆதலால் ஒவ்வொரு ஓவியத்தின் முன்னும் அவர்கள் நிதானமாக இரசித்தவண்ணம் வந்தனர். தேடிவந்த ஓவியங்களை காண கண்கள் அலைந்தபடியே நடந்துகொண்டிருந்தேன் நான். வேறு சில ஓவியங்களும் என்னைக் கவர்ந்திருந்தன. அதற்குள் எனது தம்பி ஓடிவந்து நான் தேடிவந்த ஓவியங்கள் அடுத்த அறையில் இருப்பதாக அழைத்தான். உடனே அவன் பின்னால் போய்விடத்தான் தோன்றியது. ஆனாலும் நீ போ என நான் மற்ற ஓவியங்களைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்ற தோரணையில் அவனை அனுப்பி வைத்தேன்.

என்னை ஒருநிலைப்படுத்த நான் எடுத்துக்ககொண்ட நிமிடங்கள் அவை. அந்த நிமிடங்கள் மிக ரம்யமானவை. வார்த்தைகளில் அதை சொல்வது அத்தனை சுலபமல்ல. அது ஒரு காதலனை முதல்முதலில் சந்திக்கச் சென்றவர்களால் உணர்ந்து கொள்ள முடியும். தனது குழந்தையை ஒவ்வொருமுறையும் ஸ்பரிசிக்கும் ஒருவரால் அறியமுடியும். சில ஓவியங்களுக்காக மனது இத்தனை தூரம் அடித்துக்கொள்வது என்பது எனக்கே ஒரு வித வெட்கமாகத்தான் இருந்தது. அவனது ஓவியங்களின் அறையில் கால்வைத்தபோதே போதை உள்ளங்கால்களில் ஏறத்தொடங்கியது.

என் கண்முன்னே ”நிலவுறும் விழிகள்” விரிந்திருந்தது. ஒரு நொடி கண்களை இறுக்கமூடித் திறந்துகொண்டேன். காதல் என்பது இரு மனங்களுக்கானது மட்டுமல்ல என நிமிடங்கள் பேசத்தொடங்கின. பிரபஞ்சம் முழுவதுமாய் எழுந்து என் வெளி நிறைத்துநின்றான் ரவிவர்மன். எனது நிமிடங்கள் ஸ்தம்பித்தன.

## பாரதியும் இரவிவர்மனும்

ஓவியன் இரவிவர்மனை வியந்தணைத்துக் கொண்டது நான் மட்டுமல்ல. பாரதியும் தான். இரவிவர்மாவின் சித்திரங்களில் மனம் லயித்து இருந்ததை அவன் மறைந்த போது, பாரதி இந்தியா இதழில் ‘ஓர் வரப்பிரசாதியின் மரணம்’ (A Genius Dead ) என்ற தலைப்பில் வார வர்த்தமானச் செய்திகளில் எழுதியதிலிருந்தும் ‘ஓவியர்மணி இரவிவர்மா’ எனும் தலைப்பில் தீட்டிய கவிதையில் இருந்தும் அறிந்துகொள்ள முடிகிறது.

சந்திர ஒளியை இறைவன் படைத்த பின்னர், அவ்வொளியைப்பருக சாதகப்பறவையைப் படைத்தது போல, வானுல கில் தேவர்கள் பருக அமுதம் படைத்தது போல, இந்திரனு க்குப் பெருமை சேர்க்க வெள்ளை யானை கொடுத்தது போல, எங்கும் புகழ் பெற்று ஒளிவீசி நிற்கும் அளவிட முடியாத இரவிவர்மனின் குற்றமில்லா அறிவுக்கண்கள் நுகர்வதற்காக, பூக்களிலும் நீலவானிலும்,

23 ஆம் பக்கம் பார்க்க...





அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

22 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பெண்கள் முகத்திலும் இலகி விளங்கும் அழகை இறைவன் படைத்தான் என்கிறான் பாரதி.

ஒளியைப் பருகி உயிர் வாழும் சாதகப் பறவையோடும், விண்ணவரின் அமுதத்தோடும்,கிடைத்ததற்கரிய வெள்ளையானை எனவும் இரவிவர்மனை ஒப்புநோக்கிப் பார்க்கிறான் பாரதி.

அரச மாடங்களில் மட்டுமல்லாது ஏழை மக்களின் குடிசைகளிலும் கூட இரவிவர்மனுடைய ஓவியங்கள் ஒளிவீசின. செல்வந்தர்களையும் ஏழை மக்களின் உள்ளத்தையும் பேருவகையடையச் செய்த நீ, இவ்வுலக வாழ்க்கை போதுமென்று எண்ணியதாலா வானுலகம் சென்றாய் எனவும் வினவுகிறான்.

இரவிவர்மன் விண்ணுலகம் வருகிறான் என்ற செய்தி கேட்டு, இரவிவர்மன் தான் வரைந்த ஓவியங்களோடு விண்ணுலக மங்கையர் அழகை ஒப்பு நோக்கிப் பார்க்கவே வருகிறான் என்று அச்சம் கொண்ட அரம்பையும், ஊர்வசியும் மற்றுமள விண்ணுலக அழகிகள் அனைவரும் தேவலோகக் கதவை அடைத்து விட்டனராம்.

இரவிவர்மன் தீட்டிய மங்கையரோடு அரம்பையர் தம்மை ஒப்பு நோக்கினால் தாம் அழகற்றவராப் தெரிந்து விடுவோமோ என்பது விண்ணுலகப் பெண்களின் பயமாக இருந்ததாம்.

காலத்தால் என்றும் அழியாத பெருமைபெற்ற பெருஞ்சக்தி செய்யும் விடயங்கள் கூட அழிந்துபோகும் இம்மாய உலகத்தை எவ்வாறு நவில்வதென்கிறான்!

சந்திரனொளியை ஈசன் சமைத்தது சாதகப் பறவை பருகவே எனும் பாரதியின் எண்ணவோட்டங்களோடு நானும் சேர்ந்து பயணிக்கும் போது அருங்காட்சியகத்தில் நான் வியந்து நோக்கிய இரவிவர்மனின் நிலாப் பெண் (Lady in the moonlight ) மனக்காட்சியில் இனிய சித்திரமாய் தோன்ற நானும் பாரதியும் அக்கண்மகிழ் சித்திரத்தில் கரைந்து கொண்டிருக்கிறோம்“

சந்திர னொளிளை ஈசன் சமைத்து அது பருக வென்றே
வந்திடு சாத கப்புள் வகுத்தனன் அமுதுண்டாக்கிப்
பந்தியிற் பருக வென்றே படைத்தனன் அமரர் தம்மை
இந்திரன் மாண்புக் கென்ன இயற்றினன் வெளிய யானை.

மலரினில் நீலவானில் மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை ஈசன் இயற்றினான் சீர்த்தி இந்த
உலகினில் எங்கும் வீசி ஓங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக்கண்ணால் அனைத்தையும் நுகருமாறே.

மன்னர்மா ளிகையில் ஏழை மக்களின் குடிலில் எல்லாம்
உன்னருந் தேசுவீசி உளத்தினை களிக்கச் செய்வான் நன்னரோ
பொன்னணி யுலகு சென்றான் புவிப்புகழ் போதுமென்பான்.

அரம்பைஊர் வசிபோலுள்ள அமரமெல் லியலார் செவ்வி
திறம்பட வகுத்த எம்மான் செய்தொழில் ஒப்பு நோக்க
விரும்பியே கொல்லாம் இன்று விண்ணுல கடைத்து விட்டாய்!
அரம்பையர்,நின்கைச் செய்கைக்கு அழிதலங் கறிவை திண்ணம்.

காலவான் போக்கில் என்றுங் கழிகிலாப் பெருமைகொண்டு
கோலவான் தொழில்கள் செய்துகுலவிய பெரியோர் தாமும்

அழகியற் கண்களின் சிறு தொகுப்பு.





# பெயர் என்பது வெறும் பெயரல்ல



இந்திய ஓவியக்கலை வரலாற்றில் இரவிவர்மாவினுடைய ஓவியங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. அரசவைகளில் மட்டுமல்லாது குடிமக்களின் வீடுகளுக்கும் தனது ஓவியங்களை சென்றடைய வைத்தவர் ஓவியர் இரவி வர்மா. எண்ணை வர்ண ஓவியங்களை ஐரோபியர்களிடம் கற்றுகொண்டாலும், இந்திய அழகியலையும், இந்தியக் கதைகளையும் ஓவியங்களாக்கியவர். அவைகள் ஐரோப்பியக் காலணியச் சிந்தனைக்கு எதிர்வினையாற்றும் வகையில் அமைந்தன.

இரவிவர்மாவின் ஓவியங்களைக் கட்டமைப்பு ரீதியாக மட்டுமே பல வகைகளில் ஆய்ந்தறிய முடியும். அவ் ஓவியப் பெண்களைப் பற்றியும் அவர்களுடைய கண்களைப் பற்றியும் யாருடனாவது பகிர பல சந்தர்ப்பங்களில் எண்ணியிருக்கிறேன். அரசவைப்பெண்கள், இதிகாசப்பெண்கள், சாதாரணப் பெண்கள் ஓவியங்களில் பலபாகுபாடுகள் இருந்தாலும், இரவிவர்மாவின் ஓவியங்களிற் காணப்படும் பெண்கள் இருவகைதான். அவைகளை அவர்களுடைய கண்களால் மட்டுமே பாகுபாடுத்த முடியும்.

ஒன்று நேராக, விறைத்த, எந்தச் சலனமுமற்ற கண்களைக் கொண்ட பெண்கள். இவர்கள் அரசவைப் பெண்களாகவும், இறைவியராகவும் இருக்கின்றனர். சிலர் கேட்டுக்கொண்டமைக்காக வரையப்பட்ட ஓவியங்களாக அவை இருக்கக்கூடும்.

மற்றையது இரவிவர்மாவினுடைய கலைக் கண்களினூடாகப் பார்க்கப்பட்ட பெண்கள். இப்பெண்களுடைய கண்கள் கனவுலகத்தில் சஞ்சரிப்பவை. அக்கண்களின் வெளிப்பாட்டில் சிறுஏக்கம் இருக்கக்கூடும். அல்லால் ஒரு எதிர்பார்ப்பு, மென் கனவு, சிறுகாமம், தன்னை இழந்து மற்றோர் உலகத்தில் லயித்திருக்கும் ஒரு கணம் என அக்கண்கள் மிக வசீகரமானவை.

இவ்வழகியலைக் கொண்ட பெண்களை நகல் செய்யும் கலைஞர்கள், ஆடையணிகளுக்கும், பிற்புலக்காட்சிகளுக்கும் முக்கியத்துவம் தந்திருக்கின்றனர். அம் முக்கியத்துவத்தை கண்களின்



ஆத்மாவிற்கு கொடுக்கத் தவறிவிடுகிறார்கள். பிறர் கேட்டமைக்காக அவ் ஓவியங்களை மறுமுறை வரைந்த சந்தர்ப்பங்களில் ஓவியர் இரவி வர்மா கூட அக்கண்களின் உயிரை தனது நகல் ஓவியங்களில் எடுத்துச்செல்லவில்லை என்பதே உண்மை. அசல் மற்றும் நகல் ஓவியங்களையும் அவைகளின் கண்களையும் அடுத்த ஒரு சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொள்வோம்.

இரவிவர்மாவின் அழகியல் எப்போதும் கண்களினூடாக விரிகிறது.


‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com

aaDaa Finance 0798000100



finma : 34598 cicero : 25605
தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# ஜனநாயகத்துக்காக குரல் கொடுப்பதால் 'பயங்கரவாதி'களாக்கப்படும் சிங்களவர்

எந்தளவுக்கு கொடுமையானது என் பதை இப்போதுதான் அவர்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

### பயங்கரவாத தடைச் சட்டம் கொடூரமான ஒன்றுதானா?

இந்த சட்டத்திலுள்ள மிக மோசமான அம்சங்கள் என பல விடயங்கள் இருந் தாலும் மூன்று விடயங்களை முக்கியமா னதாகக் குறிப்பிடலாம்.

முதலாவது கைது செய்யப்படும் ஒரு வரை 18 மாதங்களுக்குத் தடுத்துவைத்து விசாரணை செய்ய முடியும். யாரைக் கைது செய்தாலும் அவ்வாறு தடுத்து வைக்க முடியும்.

இரண்டாவது, கைது செய்யப்பட்ட ஒரு வா் தொடா்பில் குறிப்பிட்ட காலத்துக்குள் அவா் மீதான விசாரணையை முடித்து விட வேண்டும் என்ற ஒரு வரையறை இந்தச்சட்டமூலத்தில் இல்லை. இதனால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான ஒருவரை விசாரணைகள் எது வும் இல்லாமலே பலவருடங்களுக்குத் தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியும். விசாரணை முடிவடைந்தாலும் வழக்குத் தாக்கல் செய்யாமல் மேலும் காலம் தாழ்த்தப்படலாம். கைதான பலர் 20-25 வருடங்கள் என சிறையில் வாடுவதற்கு இதுதான் காரணம்.

மூன்றாவதாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகும் ஒருவருக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதிமன்றத் துக்கு இல்லை. சட்டமா அதிபா் சம்மதம் தெரிவித்தால் மட்டும்தான் பிணை வழங்க முடியும். அதாவது பிணை வழங்கும் அதிகாரம் நிர்வாகத்துறைக்கு வழங்கப் பட்டுள்ளதே தவிர, நீதித்துறைக்கு அது இல்லை.



இந்த விடயங்கள்தான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கொடூரமான அம்சங்கள். இதனைவிட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சியாகப் பயன்ப டுத்தும் நிலையும் உள்ளது. இந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் சித்திரவதைகள் மூலமாகப் பெறப்பட்டவையாகவும் இருக் கலாம் என்பது கவனிக்கத்தக்கது. தமிழ் இளைஞா்கள் பலர் நீண்ட காலத்துக்கு சிறைவாசம் இருக்க வேண்டிய நிலை ஏற் பட்டமைக்கும் இதுதான் காரணம்.

ஆறு மாதங்களுக்கென வந்தது 43 ஆண்டுகளாக தொடாகிறது பயங்கரவாத தடைச் சட்டம். 1979 ஆம் ஆண்டு 48 ஆவது இலக்கச் சட்டமாக கொண்டுவ ரப்பட்டது. இது ஒரேநாளில் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட் டது. முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதிதான் இதனை வரைந்தவர். அப் போது நீதி அமைச்சராக இருந்தவர் டபிள்யு தேவநாயகம். இச்சட்டமூலம் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட் டபோது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள எம்.பி.க்கள் இதற்கு எதிர்ப்பும் தெரிவிக்க வில்லை. ஆதரவும் தெரிவிக்கவில்லை. அதிலிருந்து விலகிநின்றார்கள். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் 17 பாராளுமன்ற உறுப்பினா்கள் இருந் தார்கள்.

ஜெயவர்த்தன அரசாங்கத்தில் ஒரு தற்காலிக சட்டமூலமாகவே இது கொண் டுவரப்பட்டது. அதாவது, ஆறு மாத காலத் துக்குள் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற நோக்கத்துடன்தான் இது கொண் டுவரப்பட்டது. ஆறுமாத காலத்துக்கென உருவாக்கப்பட்ட இந்தச் சட்டமூலம் 1982 இல் நிரந்தர சட்டமூலமாக்கப்பட்டது.




அந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு கடந்த ஜூலை மாதத்துடன் 43 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டது. இருந்தபோதிலும் இந்தச் சட்டம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. எந்த நோக்கத்துக்காக இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டுவிட் டதாக 2009 ஆம் ஆண்டு அரசாங்கத்தி னால் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டு விட்ட போதிலும், இந்தச் சட்டம் இப்போதும் நடைமுறைப்படுத்தப்படுவது எதற்காக என்பதற்கு அரசாங்கத்தினால் பதிலளிக் கமுடியவில்லை.

இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது சிங்கள, முஸ்லிம் தலைமைத்துவங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொரோடவாக இருந்த மைத்திரிபால சேனாநாயக்க மட்டும் இதனை எதிர்த்து வாக்களித்தார்.

### போருக்குப் பின்னரும் கைது, தடுப்புக்காவல்

போர் முடிவடைந்த பின்னர் 2017 க்குப் பின்னரும் விடுதலைப் புலிகளை மீளரு வாக்குகின்றார்கள். அதற்கு ஆதரவாக முகநூலில் பதிவிடுகின்றார்கள்

30 ஆம் பக்கம் பார்க்க...


## அமரர் முருகேசு கோபாலபிள்ளை அவர்களின்

# 100 வது பிறந்தநாள்

23.01.1923



அமரர் முருகேசு கோபாலபிள்ளை



**எனது பார்வையில் எனது ஐயா!**

வசந்தகால நதிகளிலே
வைரமணி நீர் அலைகள்
இந்த இரண்டு வரிகளும் காதலுக்கு மட்டுமல்ல
தந்தை மகன் உறவுக்கும் பொருந்தும்

**நான் அவருடன் வாழ்ந்த காலங்கள் 252 மாதங்கள். அதில் 36மாதங்கள் எனது அறியாப் பருவம் மீதி 216 மாதத்தில் அவருடன் நான் அன்பாகவும் கண்டிப்பாகவும் உறவாடியகாலம் 36 மாதங்கள் மட்டுமே! ஆச்சரியமாக உள்ளதா?**

**இல்லவே இல்லை! கூட்டிக்கழித்துப்பார்த்தால் சரியாகவே இருக்கும்.**

**அவர் வேலைநிமித்தம் வெளியூர் செல்வார், நாங்கள் பாடசாலை விளையாட்டு என செல்வோம். ஒரு நாளுக்கு 15/20 நிமிடங்கள் பழகிருப்பார். ஏன் என்று கேட்காலாம் எனது வீட்டில் 9 பேர்கள், மொத்தம் கணக்குப் போட்டுபாருங்கள் ஆக நான் பழகிய இந்த வைர நினைவுகளை என்னால் என்றுமே மறக்கமுடியாதவை.**

100 வது பிறந்தநாளை அவரது பிள்ளைகள் மருமக்கள்,திருமதி, தர்மலிங்கம். கமலாதேவி (மகள்)
திரு, திருமதி, குலேந்திரன் சாந்தா.மகன் /மருமகள், திரு. திருமதி. கனகராஜா, ரஞ்ஜனிதேவி. முகன் /மருமகள்
திரு. திருமதி ரட்னசபாபதி, ஜமுனா மகன் /மருமகள்., திரு, திருமதி. குகதாசன், விமலாதேவி மருமகன் /மகள்
திரு, திருமதி ஞானேஸ்வரன், ரமணிதேவி. மகன் /மருமகள், திரு. திருமதி ராமச்சந்திரன். விமலாதேவி. மகன் /மருமகள்
திரு, திருமதி சிவகுமார், சியாமளாதேவி மருமகன் / மகள், திரு. திருமதி தவராஜா, நிர்மலா மகன் /மருமகள்
மற்றும் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள், அவரது அன்பு மனைவி பராசக்தி உடன்
அன்பு மகன் Goparagnanam கொண்டாடுகின்றார்.

## வெந்து தணிந்தது காடு முதலாவது விமர்சனப் பார்வை...




# ஐபோனில் உருவாக்கப்பட்டு வெளியாகும் முதலாவது இலங்கைத் திரைப்படம்

**28 சர்வதேச விருதுகளை பெற்றிருக்கின்றது.**

நான் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலங்களிலேயே யாழ்ப்பாணத்தில் பிறந்தேன். அக்கம்பக்கத்தினரோடு என்னை ஒரு அட்டைப்பெட்டியில் போட்டுக்கொண்டு பதுங்கு குழிகளில் (பங்கர்களில்) பதுங்கி இருந்த கதைகளையும் ஷெல் துண்டுகள் பட்டு பக்கத்தில் இருப்பவர்களின் கை,கால்களில் ரத்தம் ஆறாக ஓடும் கதைகளையும், கையை பிடித்துக்கொண்டு பின்தொடரும் மரணம் பற்றியும் எனது அம்மா என்னிடம் அடிக்கடி கூறி இருக்கிறார்.

அது எப்படி இருக்கும் என்பதோ யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள் எத்தனை துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்தார்கள் என்பதோ என்னால் உணர்ந்து பார்க்க முடியாத ஒரு உணர்வாகவே இருந்து வந்தது.

ஏனெனில் பிள்ளைகளை பாதுகாக்கும் பொருட்டு என் பெற்றோர் இடம்பெயர்ந்து விட்டனர். அதனால் நான் நேரடியாக பாதிக்கப்படவில்லை என்றாலும், எனது அம்மா, அம்மாவின் சகோதரர், பெற்றோர் என எல்லோரும் அந்த வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள், என் அம்மாவின் மூத்த தம்பி, என் மாமா யுத்தத்தின் போது காணாமல் போன பல லட்சங்களில் ஒரு ஜீவன். சாப்பிட உணவில்லாமல், போக்குவரத்து வசதி இல்லாமல், அம்மா என்னை வயிற்றில் சுமந்து கொண்டு பல மைல் தூரம் நடந்து வந்த கதை எல்லாம் கேட்டிருக்கிறேன்.

எனது இருபதுகளின் தொடக்கத்தில் நானும் ஒருமுறை சந்தேகத்தின் பேரில் கொழும்பில் பிடிபட்டு ஒரு இரவு முழுதும் பொலிஸ் நிலையத்தில் இருந்திருக்கிறேன், எனது அடையாள அட்டையில் பிறந்த இடம் “யாழ்ப்பாணம் “ என்றிருந்ததால்.

யுத்தத்தை பற்றிய செய்திகளும், புத்தகங்களும், கவிதைகளும், படங்களும் எனக்குள் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன, ஒரு கட்டத்துக்கு மேல் என்னால் யுத்தம் தொடர்பான எந்த படைப்பையும் பார்ப்பதோ வாசிப்பதோ பெரும் சவாலாக இருந்தது. அதை கற்பனை செய்து பார்ப்பதே கொடூரமானதாக இருந்தது. ஒருநாள் மாலையில் மதிசுதாவிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. “வெந்து தணிந்தது காடு“ திரைப்படத்தின் மொழிபெயர்ப்பில் ஒரு சில மாற்றங்களை செய்யவேண்டுமென்று, நானும் மகிழ்ச்சியுடன் வேலையைத் தொடங்கினேன். இதுவரை 28க்கும் அதிகமான விருதுகளை பெற்றிருக்கும் இந்தப் படத்தில் அப்படி என்ன தான் இருக்கிறது என்ற ஆர்வம் வேறு,மிக ஆறுதலாக ஒவ்வொரு காட்சியாக மனதை ஒரு நிலைப்படுத்தி பார்த்தேன்.

கொஞ்சம் கொஞ்சமாக அது ஒரு சினிமா என்பதை மறந்து எம்மக்களின் வாழ்க்கை என்பதை உணரத்

தொடங்கினேன். பாத்திரங்களின் தெரிவு அத்தனை கச்சிதமாய் பொருந்தி இருக்கிறது, அதைப்பற்றி படத்தின் இயக்குனரிடம் கேட்ட போது படத்தில் நடித்தவர்களில் பெரும்பாலானோர் தாம் வாழ்ந்த வாழ்க்கையையே இன்னொருமுறை கேமரா முன்னிலையில் வாழ வேண்டியிருந்தது என்றார். திரை மொழி மிக தீர்க்கமானதாகவும், புரிந்துகொள்ளும் வகையிலும் இருந்தது. படத்தின் கலைஞர்கள் மிக மிக தேர்ச்சி பெற்ற வர்களாக,




புதியவற்றை கற்றுக்கொள்ளும் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது படத் தின் மூலம் புரிந்தது. இன்னும் இலங்கையில் உத்தியோகபூர்வமாக வெளியாகாத திரைப்படம் ஆகையால் சில காட்சிகளின் நேர்த்தியையும் ரசனையையும் இங்கே குறிப்பிட முடியாமல் உள்ளது. அன்பும் மனிதநேயமும் சமத்துவமும் கற்பிக்கும் பல காட்சிகளை இந்த படத்தில் அவதானித்தேன்.

இந்த திரைப்படத்தில் நியாயம், தர்மம், என்பதெல்லாம் அவரவர்க்கான அவ்வப்போதைய சூழ்நிலையைப் பொறுத்தது என்பதும் அழகாக எடுத்துக்காட்டப்படுகிறது. மரணத்தை எப்போதும் எதிர்கொள்ளத் தயாரான இந்த மக்கள் காதல் கொள்கிறார்கள், உறவுகளை நேசிக்கிறார்கள், மற்றவரை பற்றி சிந்திக்கிறார்கள், எல்லோரையும் ஒன்று போல சேர்த்துக்கொள்கிறார்கள்.

ஒரு நல்ல கலைப் படைப்பானது அதை பார்ப்பவர்களுக்குள் ஒரு அதிர்வினை ஏற்படுத்த வேண்டும். அந்த அதிர்வு கட்டாயமாக வன்முறையைத் தூண்டுவதாக இருக்கக் கூடாது என்பது என் எண்ணம். சில சமயங்களில் ஒருவர் மீது ஏற்படும் மரியாதையாகவோ, கருணையாகவோ ஏன் குற்றவுணர்ச்சியாகக் கூட இருக்கலாம். சகமனிதர் இத் தனை துயருற்றிருக்கிறார்களே என கண்ணீர் சிந்தவும் வைக்கலாம்.

28 சர்வதேச விருதுகளை பெற்றிருக்கின்றது.

பாதிக்கப்பட்ட ஒருவனால் அல்லது ஒரு சிலரால் வன்மத்தைக் கடத்தாது தமது வலிகளை ஒரு திரைப்படமாக்க முடியுமானால் அது ஒரு உன்னதமான படைப்பாகிறது. எனக்கு மதிசுதாவின் “வெந்து தணிந்தது காடு“ ஒரு உன்னதமான படைப்பு. நமது வெந்து தணிந்தது காடு திரைப்படமானது இதுவரை 15 நாடுகளில் 28 சர்வதேச விருதுகளை பெற்றிருக்கின்றது. ஈழத்தின் பழம் பெரும் பாடகியான பார்வதி சிவபாதம் பிரதான பாத்திரம் ஏற்று நடித்திருந்ததுடன் 2 நாடுகளில் சிறந்த நடிகைக்கான சர்வதேச விருதையும் பெற்றிருக்கின்றார். இலங்கையில் இத்திரைப்படமானது 3 வரலாற்று சாதனைகளைப் புரிந்திருக்கிறது. ஐபோனில் உருவாக்கப்பட்டு வெளியாகும் முதலாவது இலங்கைத் திரைப்படம். அதிகளவான மக்கள் இணைந்து முதலிட்டுத் தயாரித்த திரைப்படம். அதிகளவான விருதைப் பெற்ற கைப்பேசித் திரைப்படம். திரைப்படத்தை நிச்சயமாக திரையரங்குகளுக்குச் சென்று பாருங்கள். நிச்சயமாக உங்கள் பணத்தை விட பலமடங்கு அனுபவமும் திருப்தியும் பெற்று வருவீர்கள்.

நேபாளத்தின் காத்மண்டுவில் இடம்பெறும் Nepal Cultural International Film Festival - NCIFF இல் நம் நாட்டு கலைஞர் மதிசுதா இயக்கத்தில் வெளியான “வெந்து தணிந்தது காடு“ திரைப்படமானது Rising Mall Theatre இல் திரையிடப்பட்டது.

நிரோஜினி ரொபர்ட்

**நன்றி.தினகரன் வாரமஞ்சரி**



ராமேஸ்வரம் காசி புனித யாத்திரை

(North India)

விரிவான மேலதிக விபரங்கள்
மாசி மாதம் வெற்றிமணியில் அறியலாம்.



செல்வி பாலேந்திரன் பிரதாரிணி (நாவலப்பிட்டி)

# மலையக அரங்கின் சில சமகால போக்குகள்

மலையக மக்களின் தொழில் புலப்பெயர்வானது 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இம் மக்களுக்கென தனித்துவம் இன்றும் பேணப்படுகிறன. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்ட உற்பத்திக்காகக் கொணரப்பட்ட இத்தொழிலாளர்கள் தமக்கென தனித்துவ கலைக்கலாச்சாரங்களையும் கொணர்ந்தனர். மலையகத்தில் சடங்காற்றுகை அரங்கு கல்வியல் அரங்கு தொழில்முறை அரங்கு என பல தளங்களில் இன்று நாடகம் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்குள் கணிசமான வளர்ச்சியை கண்டுள்ளது. ஈழச் சுதந்திரத்துக்குப் பின் தோன்றிய மலையக இலக்கியங்கள் தனிச்சிறப்பு பெற தொடங்கின. காரணம் அவை இனத்துவ அடையாளத்தை முதன்மைப் படுத்தியதாக காணப்பட்டன. ஈழத்தில் வாழும் தமிழர் மத்தியில் மலையகத் தமிழரின் இன அடையாளம் பண்பாடு பொருளாதார என்பன வித்தியாசப்படுவது அதுமட்டுமின்றி மலையக மக்களின் வாழ்வியலும் பெரும் பிரச்சனைக்கும் சவாலுக் குரியதாகும். மலையக இலக்கியங்களை நோக்கும் போது அம்மக்களின் தனித்துவமே இலக்கிய அறுவடையை தீர்மானிக்கின்றன. இம்மக்களின் வருகையுடனேயே வாய்மொழி இலக்கியங்களும், ஆடல் பாடல் நிறைந்த பொழுதுபோக்கு ஆற்றுகைகளும் இவர்களிடத்தே முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. அது மட்டுமன்றி கூத்துக்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மலையக சமூகம் தனித்துவ இலக்கிய போக்கை கொண்டுள்ளது. இந்த வகையில் நாடகக் கலையும் இதற்கு விதிவிலக்கல்ல. இன்றைய சமகாலத்தில் இக்கலையானது தனி பண்பாடு தனி அடையாளம் என்பவற்றை மருதலித்து பொதுமை, பன்மை என்ற எண்ணக் கருவில் செயற்பட்டு வருகின்றது. உண்மையில் தனித்துவம் என்பது சிறப்பானதாக கருதப்பட்டாலும் அது மிகக் குறுகிய கண்ணோட்டத்தையே ஏற்படுத்தும். இனவெறியை நீக்குதல் மற்றும் புரிதல் ஆகியன நாடகத்தில் முக்கிய கதைக் கருவாக பேசப்படுகின்றன. இவ் வெண்ணக்கரு பற்றிய புரிதலை பாதுகாப்பான தளத்தில் பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் நாடகக்கலை முக்கிய மூலப் பொருளாக இருக்கின்றது. வெவ்வேறு அம்சங்களை உள்ளடக்கியது சமூகங்களுக்கிடையிலான புரிதலின்மை, மோதல், தவறான தகவல், தனித்தன்மை போன்ற சிந்தனைகளால் இவை ஊக்குவிக்கப்படும் சந்தர்ப்பம் அதிகம். நாடக கலைஞர்கள் இம் முக்கிய புள்ளியில் இருந்து அவர்களின் சொந்த அனுபவங்கள் அல்லது கருத்துக்களை விவாதிக்க முடியும். மேலும் பாலர் பாடசாலையில் வித்தியாசங்களை கொண்டாடுவோம் (Celebrating our Difference) என்ற கருப்பொருளில் நானும் மற்றவர்களும் (my self and others) புதுமையான விடயங்களை கற்றல் செயல்பாடுகள் மூலமாக மாணவர்கள் உணர்வதற்கான சமூக பன்முகத் தன்மைகளை "போல செய்கின்றார்கள்". சிறுவயதிலிருந்தே முற்போக்கான சிந்தனையை நாடகம் வளர்த்தெடுக்கின்றது.

மனித உரிமை பற்றிய விழிப்புணர்வையும் மனித வாழ்வுக்கான முன்னேற்றத்தையும் நாடகத்தில் எவ்வாறு வாதிடலாம் அல்லது பயன்படுத்தலாம் பற்றிய சிந்தனைகள் புவியியல் அம்சங்கள், நாடகக் கதை கரு, கலைஞரின் கருத்தியல், சிந்தனை, நிகழ்வுகளின் பாதிப்பு போன்ற தலங்களில் இருந்து உருவாக்கப்படுகின்றது. இவை படைப்பாற்றல் மற்றும் குழு ஒத்துழைப்பின் மூலம் சமூகத்தை நேரடியாக சென்றடைகின்றது. சமூகத்தில் நாடக கலைஞரின் பங்கு என்ன என்பதை விளக்கும் முக்கிய அறிக்கைகளும் தயாரிக்கப்படுகின்றன. மேலும் மலையகத்தில் காணப்படுகின்ற பிரச்சனைகளை மையப்படுத்தும் நோக்கில் கலைஞர்கள் தீவிர கலந் துரையாடல் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். இதனால் சக கலைஞர்களின் ஒத்துழைப்பையும் சமூக ஒருங்கிணைவயும் வாய்ப்புகளையும் அதில் உள்ள சிக்கல்களையும் கோடிட்டு காட்டுவதன் மூலம் பார்வையாளர்களின் உணர்ச்சி மற்றும் சிந்தனை தூண்டப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பார்வையாளர்கள் ஆற்றுகை யாளராகவும் மாறுகின்றனர். இன்று மலையகத்தில் பெரும்பாலான தோட்ட பகுதிகளில் விழிப்புணர்வு சார்ந்த வீதி நாடகங்கள் முக்கிய மைய இடத்தை பெற்றிருக்கின்றன. மலையக அரங்கை பொறுத்த அளவில் தனி சமூகப் பிரச்சனை மட்டுமின்றி ஒட்டுமொத்த தமிழரின் பிரச்சனைகள் பேசப்பட்டு அவை பெருந்தோட்ட துறை மக்களை ஊக்குவிப்பதாகவும் உள்ளூர் மற்றும் தேசிய மட்டத்தில் பேசு பொருளாக மாறக்கூடிய முறையில் இன்று மலையக நாடகப் போக்குகள் காணப்படுகின்றது.

pradharani92@gmail.com

# தேடுதல் வெளிச்சமும் கம்பராமாயணமும்!



இரா.சம்பந்தன் (கனடா)

இன்றைய அறிவியல் உலகம் காலத்துக்கக் காலம் ஒவ்வொன்றாகக் கண்டுபிடித்துப் பயன்படுத்தும் எத்தனையோ நவீன தொழில் நுட்ப சாதனங்களை எல்லாம் ஏற்கனவே தாம் பயன்பாட்டில் வைத்திருந்ததாகத் தெரியப்படுத்தும் ஒரு இதிகாசம் கம்பராமாயணம் ஆகும். இன்றைய அணு ஏவுகணைகளை பாசுபதாஸ்திரம் என்றும் எதிரிகள் மீது நச்சு வாயுத் தாக்குதல்களை நிகழ்த்தி மயக்மடையச் செய்வதைப் பிரம்மாஸ்திரப் பிரயோகம் என்றும் இன்றைய சுப்பர் சொனிக் விமானங்களை புஸ்பக விமானம் என்றும் கம்பராமாயணம் அறிவிக்கின்றது!

இவற்றைப் போலத்தான் Flare Gun என்று சொல்லப்படும் ஆயுதப் பயன்பாட்டைப் பற்றியும் இராமாயணம் எடுத்துக் கூறுகின்றது. 1800 களின் பிற்பகுதியில்தோற்றம் பெற்று தேடுதல் வெளிச்சமாகவும் சமிக்கை வெளிச்சமாகவும் இன்றுவரை பயன்படும் இந்தவகை ஆயுதம் அதே தேவைக்காக இராமனால் பயன்படுத்தப்பட்டது என்று கம்பன் சொல்கின்றான்.

கானகத்திலே இலட்சுமணனை தாகத்துக்குத் தண்ணீர் எடுத்துவர அனுப்பி விட்டு இருந்த இராமன் இருட்டிலே இலட்சுமணனால் வெட்டப்பட்டு பெருங்குரல் எடுத்து அழுத அயோமுகியின் சத்தம் கேட்டுத் திகைக்கின்றான்! அந்த அழுகை ஓசை வந்த திசை நோக்கி ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ஓடுகின்றான்!

பாதை தெரியாத இருட்டு! உடனே இராமன் அக்கினி பாணம் எனப் பெயரிடப்பட்ட ஒரு கணையை எடுத்து கைக்குள் வைத்து திரித்த உடனே இங்கிருந்த இருட்டு மறைந்து வேறு உலகத்துக்கு ஓடிவிட அந்த இரவு வேளையும் பகல் போல வெளிச்சமானதாக ஆகியது! அது கம்பன் சொன்ன செய்தி!

**அங்கியின் நெடும்படை வாங்கி ஆங்கு அது**
**செங்கையில் கரியவன் திரிக்கும் எல்லையில்**
**பொங்கு இருள் அப்புறத்து உலகம் புக்கது**
**கங்குலும் பகல் எனப் பொலிந்து காட்டிற்றே.**

இந்தச் செய்தி கம்பராமாயணம் ஆரணிய காண்டத்தில் அயோமுகிப் படலத்தில் வருகின்றது! இங்கே நாம் சிந்திக்க வேண்டியது இக்கால விஞ்ஞானம் ஆயுதத்தில் இருந்து வெளிச்சம் உண்டாக்கித் தேடுதல் நடபடிக்கையில் ஈடுபடும் இராணுவ முயற்சியை கண்டறிந்து ஆரம்பிக்கும் முன்னரே அது நிகழ்த்தி முடிக்கப்பட்ட வரலாறு இராமாணத்தில் உள்ளது என்பது மட்டும் தான்!அது மட்டுமல்ல இன்று போல அன்றும் அது போர்க்கருவியாக இருந்திருக்கின்றது. தேவை கருதி வில்லில் இருந்து செலுத்தக் கூடியதாக அது வடிவமைக்கப் பட்டு இருந்திருக்கின்றது!




ஓம் சாய் ராம்

**விட்டல சாயி பாபா ஆலயம்**

Vittala Sai Baba Aalayam – Münster-Germany

**இசை நிகழ்ச்சி : 04.02.2023 சனிக்கிழமை**



ஜேர்மனியில் அமைந்துள்ள விட்டல சாயி பாபா ஆலயத்துக்கு தென்னிந்தயாவில் இருந்து வருகை தரும் கலைமாமணி வீரமணி ராஜு அபிஷேக் ராஜீ இருவரின் இசை நிகழ்ச்சி பெப்ரவரி மாதம் 04.02.2023 சனிக்கிழமை அன்று நடைபெறும் என்பதை அறிய தருகிறோம்

நிகழ்ச்சி நிரல் :

- 12 மணிக்கு பாபாக்கு ஆராத்தி மங்கள இசை
- 14 மணிக்கு பரதநாட்டியம் அதனை தொடர்ந்து இசை கச்சேரி ஆரம்பமாகும்

(Seeradi) Vittala Sai Baba Aalayam | An der Hansalinie 38 | 59387 Ascheberg | Münster-Germany- Tel.Nr.: 01741584315

அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# ஈழத்து கவிதை பரப்பிலும் பாடல் வெளியிலும் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள்!

**வெற்றி துஷ்யந்தன்**

ஈழத்து கவிதை பரப்பிலும் பாடல் வெளியிலும் கவிஞர் புதுவை இரத்தினதுரை என்னும் இலக்கிய படைப்பாளி பெறுகின்ற வகிபாகம் என்பது அதுவொரு வரலாற்று பெறுமானம்.

புதுவை முதலில் ஈழத்தின் தலைசிறந்த ஒரு இலக்கிய படைப்பாளி. அதன் பின்னர் தான் அவர் அமைப்பியல் சார் ஒரு அங்கத்துவன். இங்கு இன்று புதுவையின் படைப்பை பற்றியும்,அவரின் பெறுமானங்களை பற்றியும் பொதுவெளியில் பேசுவதற்கும் எழுத்துத் தளத்தில் பதிவதற்கு பலர் விரும்புவதில்லை. எவ்வளவுதான் காரணங்களை காட்டி ஒரு படைப்பாளனை மறைக்க முனைந்தாலும் அந்த தனித்த ஆலமரம் விழுதுகள் வழியாகவும் படைப்பின் வாயிலாலாவும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

வெறும்பிரசார உத்தியை முன்னிறுத்திய படைப்புக்கள் மாத்திரம் தான் அவர் எழுதினார் ,எந்த புதுவித உத்திகளையும் கொண்டுவரவில்லை என்று இன்றும் செல்வோருக்கு இந்த நாமம் என்றுமே அலேர்ஜிக்தான் என்பது உண்மை.புதுவையின் பாடல்கள், கவிதைகள் ஒவ்வொன்றும் ஏதோவொரு தளத்தில் புதுமையை முன்னிறுத்தியவை .

எத்தனையோ எழுச்சிப்பாடல்கள் சிறப்புற தந்த புதுவையின் விரல்கள் சில மொழி விளையாட்டுக்களையும் அவ்வப்போதுகளில் பாடல்களில் செய்திருக்கினறது . அருணகிரிநாதரின் திருப்புகழை ஒட்டி அதன் சாயலில் இன்று தமிழ் திரையிசையில் வைரமுத்து,மதன் கார்க்கி, விவேக் போன்றவர்கள் எழுதுகின்ற பாடல்களை நாம் சம காலத்தில் கண்டும் கேட்டும் இருக்கின்றோம்.

ஆனால் அதைக்கூட அவர் மிகச்சிறப்பாக தன் விரல்களினால் அன்றே ஒரு பாடலில் வெளிப்படுத்துகின்றார்.

ஆம்“ வரும் பகை திரும்பும் “என்னும் இறுவெட்டில் ஒரு பாடல் அமையப்பெற்றிருக்கும் பின்வருமாறு ..



**“கிட்டுப் படையணி குட்டிச் சிறியணி**
**கொட்டும் எறிகணை விடிகாலை –நீ**
**பத்தைக் கருகினில் செத்துக் கிடவினி**
**முத்திக் கொருவழி முகமாலை**
**கைதடி நாவற் குழிவரை –அட**
**கரவெட்டி தெல்லி பளைவரை**
**தையிட்டி கீரி மலைவரை –எறி**
**கணைவரும் உங்கள் அறைவரை “**

உண்மையில் இந்த வரிகளை இசையின்றி வாசிக்கும் போதே இந்த நடையில் எவ்வசனம் வரினும் அழகாய் தான் தெரியும் ஆனால் இது இசையோடு பாடலாய் பரிணமிக்கும் போது அதன் இரசனை வேறு.

தாயக இசையமைப்பாளர் இசைப்பிரியனின் அற்புதமான இசையிலும் சுகுமார் ,திருமலை சந்திரன் ஆகியோரின் குரலிலும் அமையப்பெற்ற இப்பாடல் இன்றும் இனிமைதான்.

ஒருதரம் இசையமைப்பாளர் இசைப்பிரியன் அண்ணரோடு பேசுகின்ற போது இந்த பாடலுக்கு எப்படி மெட்டுக்கட்டி இசையமைத்தீர்கள் என்ற என் அவா நிறைந்த கேள்வியை கேட்டு அந்த சுகானுபவத்தை பெற்றுக்கொண்டேன்.

இரசனை என்பது ஆளாளுக்கு வித்தியாசமானது. ஆகா இந்த பெரும் படைப்பாளி தான் சார்ந்த படைப்புக்களில் புதுமையையும் தன் புலமையையும் எப்போதுகளிலும் தந்துகொண்டுதான் இருந்தார் என்பது தான் நிதர்சனம்.

ஒரு வட்டத்துக்குள் வைத்து பார்க்க போடவேண்டியவரல்ல புதுவை. தமிழ் வாழும் அத்துணை தேசங்களிலும் கொண்டாடப்பட வேண்டிய எங்கள் தேசக் கவிஞர் அவர்.

புதுவையின் இன்னும் ஒரு பாடல், அன்று எங்கும் ஒலித்தது. இப்பாடலை தென்னிந்திய திரைப்படப்பாடகர் மனோ-வாணிஜெயராம் ஆகியோர் இணைந்து பாடினர். அதன் சிலவரிகள்“

**தென்னம் கீற்றில்**
**தென்றல் வந்து மோதும்**
**என் தேசம் எங்கும்**
**குண்டு வந்து வீழும்**
**கன்னி மனம் மெல்ல மெல்ல**
**மாறும் அவள்**
**கையில் கூட ஆயுதங்கள் ஏறும்**

**தென்னம் கீற்றில் தென்றல்**
**வந்து மோதும்**
**என் தேசம் எங்கும்**
**குண்டு வந்து வீழும்**
**நிலவு வந்து பொழியும்**

**நேரம் நீ வரவில்லை**
**நான் நீண்டநேரம் காத்திருந்தேன்**
**பதில் தரவில்லை**

**ஊர் முழுதும் ஓலம் நான்**
**உறங்கி வெகு காலம்**
**உறங்கி வெகு காலம் நீ ஓடி**
**வந்தால் போதும்**

**தென்னம் கீற்றில் தென்றல்**
**வந்து மோதும்**
**என் தேசம் எங்கும் குண்டு**
**வந்து வீழும்**
**காவலுக்கு வந்த பேய்கள்**
**கடிக்கும் நாளையில்..**
**ஒரு காதல் என்ன மாலை என்ன**
**இந்த வேளையில்**

எங்கள் புலி வீரர் அவர் இருக்கும் இடம் போறேன்..

சான்றுக்கு இரு பாடலே தவிர ரசனைய-ாய் இன்னும் தேடலாம். ஈழத்து இலக்கிய பரப்பில் அவர் என்றைக்கும் ஆலமரம் தான்.

**புதுவை ஐயாவின் அகவை**
**நாள் கடந்த 03.12.2022**

## சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் 98வது பிறந்த நாள் அறக்கொடை விழா

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்த்தானம் தெல்லிப்பழை**
**07.01.2023**

**சிவத்தமிழ்விருது பெறும் சான்றோர் 2023**

பேராசிரியர்.ந.வேதநாதன்
கலாநிதி.கிரிஷாந்தி இரவீந்திரா
மூத்த தமிழாசிரியர்.திரு.வே.தனபாலசிங்கம்
பண்டிதர்,திரு.மு.சு.வேலாயுதபிள்ளை



யேர்மனி வெற்றிமணி பத்திரிகையும்
சிவத்தமிழ் சஞ்சிகையும்
சிவத்தமிழ்விருது பெறும் சான்றோரை வாழ்த்தி மகிழ்கின்றது.

Münster க்கு அருகாமையில் Warendorf நகரில்....
RESTAURANT
Westfälischer Hof
Saal Und Restaurant!
Telefon: +49 2584 9348481
தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்



Bartholomäusstraße 29, 48231
Warendorf, Germany

உங்கள் நிகழ்ச்சிகளை அழகுடனும் சுவையுடனும் செய்திட
எமது மண்டபம் அழைக்கிறது
பிறந்த நாள், நத்தார் தினக் கொண்டாட்டம், திருமண விருந்து
மற்றும் எந்தச் சிறப்பு நிகழ்வுகள் என்றாலும் எம்மிடம்
உணவு சிற்றுண்டிகள் உட்பட யாவும் செய்து தருகின்றோம்.
விருந்தினர்கள் விளையாட Kegelbahn ம் உண்டு.
அழகிய மண்டபம் தொடர்புகளுக்கு 01794855554
Restaurant 60 Sitzplätze | Kegelbahn 30 Personen
Biergarten kann 200 Plätze
Saal 300 Plätze

Öffnungszeiten: Geöffnet . Schließt um 23:00| Telefon: +49 2584 9348481

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நட்பின் இலக்கணம் இலக்கியங்களில்...

பரத்தையர் வழிப்பிரிந்த தலைவனுக்கு தலைவியோடு இணைந்து வாழவேண்டும் என்று அறிவுரை கூறுபவளும் தலைவன் தலைவியரிடையே ஏற்படும் ஊடலைத் தீர்த்து வைப்பவளும் அவளே.

ஆனால், தற்காலத்திலே தூதுபோன தோழி தலைவனைத் தன் வயப்படுத்தி தலைவியைப் பிரியச் செய்கின்ற செயல்களையும், தோழியிடம் நல்லவர் போல் நடித்து அவளுடைய நல்லெண்ணம் கொண்டவர்களிடம் அவளைப் பற்றி அவதூறு பேசுகின்ற தோழமையும் இலத்திரனியல் காலத்தில் நடைமுறை வாழ்க்கையில் மிதமிஞ்சியே காணப்படுகின்றன. உறவுகளிலே போலி என்ற வார்த்தையில் நட்பு என்ற உறவே முன்னிலை வகிக்கின்றது. கூடவே இருந்து குழி பறிக்கின்ற குணத்துடனே கைகொடுக்கும் போது எதிர்மறை ஆற்றலைச் (Negative Energy) செலுத்தி விடக்கூடிய தன்மையும் நண்பர்களுக்கு உண்டு.

அதனாலேயே தமிழர்கள் எச்சரிக்கையாக கைகூப்பி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வார்கள்.எனவே யார் உங்களுக்கு வணக்கம் தெரிவிக்கின்றார்களோ அவர்கள் உங்களிடம் எச்சரிக்கையாக இருக்கின்றார்கள் என்று அறியக் கூடியதாக இருக்கும். உன் பிள்ளை மருத்துவராகி விட்டானா? உன் பிள்ளைக்கு நல்ல மாப்பிள்ளை கிடைத்து விட்டானா? நீ நல்ல வாகனம் புதிதாக வாங்கி விட்டாயா? உனக்குச் சம்பளம் இந்த வேலையில் அதிகமாகக் கிடைக்கின்றதா? நீ வருடா வருடம் சுற்றுலா போகின்றாயா? நீ இவ்வளவு காலமும் தொடர்ச்சியாக இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றாயா? நானும் அதைச் செய்ய வேண்டும். என்னால் முடியுமோ முடியாதோ வரிந்து கட்டிக் கொண்டு குழப்பியடிக்க முயற்சிப்பேன். இப்படி அடுக்கிக் கொண்டு போகும் பொறாமை நட்புக்கள் மனதுக்குள் புழுங்கி வெளியிலே பற்களைக் காட்டிச் சிரிக்கும். எங்களைக் கட்டி அணைத்துக் கைகொடுத்து சிறப்பு, வாழ்த்துகள் என்று சொல்லும். அதனால், நம்பிக் கெடும் கோமாளிகளாக யாரும் இருக்கக் கூடாது. சிலருக்கு ஒரு சூடு. ஆனால், பலரும் சூடு வாங்கிக் கொண்டு ஏமாந்து கொண்டு வருந்துகின்றார்கள். அவர்களிடம் அவதானம் தேவை. புலம்பெயர்ந்த வாழ்க்கையில் எல்லாம் கிடைக்கின்றது. ஆனால், எப்படிக் கிடைக்கின்றது என்பதே முக்கியம். எல்லாராலும் எதையும் செய்ய முடியும். ஆனால், எப்படிச் செய்கின்றார்கள் என்பதே முக்கியம். அதனால், அவதானத்தை கைக் கொண்டு ஓடும் புளியம் பழமும் போல் வாழ்வதுதான் இக்காலத்துக்கு உரியதாக இருக்கும் என்று நினைக்கத் தோன்றுகிறது. இவ்வாறான நட்புகளுக்கு மத்தியில் எம்முடைய நெஞ்சைத் தம்முடன் இணைத்துத் தைத்துத் தொடரும் நட்புக்களும் இருக்கவே செய்கின்றன. அவர்களை காலம் இனங்காட்டிக்கொண்டே இருக்கும். எனவே நாம் உண்மை நட்பை இலக்கியங்களில் மட்டுமே அன்றி நிஜத்திலும் கண்டிப்பாகக் காணலாம்.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## 'கணுக்கால் சுளுக்கு'

வலி தணிந்து வர மீண்டும் பயிற்சிகளை சற்று தீவிரம் குறைந்த அளவுகளில் செய்ய ஆரம்பிக்கலாம். வலியின் ஆரம்ப நிலையில் ஐசை பொட்டணமாகக் கட்டி குதிநாண் சவ்விற்கு மேல் வைக்கலாம். மெல்லிய பிளாஸ்டிக் பைகளில் அல்லது டவலில் ஐசைப் போட்டுக் கட்டி வலியுள்ள இடத்தில் 10 முதல் 30 நிமிடங்கள் வரை வைக்கலாம். வலி ஏற்பட்ட முதல் ஓரிரு நாட்களில் இது அதிக பலனைக் கொடுக்கும். வலி நிவாரணிகளை சில நாட்களுக்கு உபயோகிக்கலாம். இவ்வாறு செய்வதால் வலியின் தீவிரம் புரியாமல் நீங்கள் தொடர்ந்து குதிநாணுக்கு அதிக வேலை கொடுத்தால் நோய் தீவிரமாகும் ஆபத்து உண்டு என்பதையும் மறுப்பதற்கு இல்லை. சில விசேட பயிற்சிகளை செய்வதன் மூலம் குதிக்கால் நாண் வலியைத் தணிப்பதுடன் அதை உறுதியாக்கவும் முடியும்.

### மாடிப்படி பயிற்சி

மாடிப்படித் தட்டின் அடிப்படியில் மாடிப்படியைப் பார்த்த வண்ணம் நில்லுங்கள். கால்களை சற்று அகற்றி வைத்து பாதத்தின் முன் பகுதி மட்டும் படியில் ஊன்றும்படி நில்லுங்கள். இப்பொழுது உங்கள் குதிக் கால்கள் படியின் ஓரத்திலிருந்து வெளியே தொங்கிக் கொண்டிருக்கும். விழுந்துவிடாமல் இருக்க ஓரக் கம்பிகளைப் பற்றிக் கொண்டு குதிப்பகுதியை கீழ் நோக்கி வளையுங்கள். 20-60 செகண்டுகள் அந்த நிலையில் நில்லுங்கள். அவ்வாறு செய்யும்போது உங்கள் கெண்டை தசைகள் இறுகுவதை உங்களால் உணர முடியும். 6 தடவைகள் அவ்வாறு செய்யவும். தினமும் காலை இதைத் தொடரவும்.

### டவல் பயிற்சி

காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் செய்யுங்கள். விரல்களை அண்மித்த பாதத்தின் முன் பாகத்தில் ஒரு டவலை கொழுவுங்கள். இப்பொழுது டவலை உங்களை நோக்கி இழுங்கள். இவ்வாறு செய்யும்போது உங்கள் விரல்களும் பாதத்தின் முற்பகுதியும் உங்களை நோக்கி இழுபடும். அவ்வாறு இழுக்கும்போது முழங்கால்கள் மடியாது நீட்டியபடி இருப்பதை உறுதி செய்யுங்கள். 30 செகண்டுகள் அவ்வாறு வைத்திருங்கள்.

### பாதத்தை உயர்த்தும் பயிற்சி

முழங்கால்களை செங்குத்தாக மடித்து இரண்டு பாதங்களும் தரையில் பதியு மாறு ஒரு நாற்காலியில் உட்காருங்கள். இப்பொழுது குதிக்கால்கள் தரையில் பதிந்திருக்க பாதத்தின் முற்பகுதியை மட்டும் மேல் நோக்கி உயர்த்துங்கள். சில செகண்ட்கள் அவ்வாறு இருந்தபின் பாதத்தைத் தளர்த்தி முன்போல கீழே வையுங்கள். 10 தடவைகள் திரும்பத் திரும்பச் செய்யுங்கள். அவ்வாறு தினசரி 6 தடவைகள் செய்யுங்கள்

### வேறு சிகிச்சைகள்.

ஸ்டிறொயிட் ஊசி மருந்தை அவ்விடத்தில் ஏற்றுவதை சிலர் செய்தபோதும், சவ்வு மேலும் சேதமுற வாய்ப்புகள் இருப்பதால் பெரும்பாலான மருத்துவர்கள் விரும்புவதிலலை. அரிதாக சத்திர சிகிச்சை செய்யப்படுவதுண்டு. குதிநாண் வலியானது படிப்படியாக அதிகரி க்கும் என ஆரம்பதத்தில் கூறினோம். மாறாக திடீரேன ஏற்படும் வலியானது அத்தசை நாரில் கிழிவு (Achilles Tendon Rupture) ஏற்பட்டதால் இருக்கலாம். இது பொறுத்திருக்கக் கூடிய நிலையல்ல. அவசரமாக மருத்துவரை அணுக வேண்டியது. அதற்கு சத்திர சகிச்சை தேவைப்படலாம் அல்லது பிளாஸடர் ஒவ் பாரிஸால் சாந்து (Plaster Of Paris cast) போட்டு அச்சவ்விற்கு ஓய்வு கொடுக்க நேரலாம். எதற்கும் உங்கள் மருத்துவரை நேரே அணுகி தெளிவு பெறுவது அவசியம். ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கருப்பா? சிவப்பா?

அடுத்த கேள்வி எழுவதுதான் யதார்த்தம். ஒருவர் கருப்பாகவோ, வெளுப்பாகவோ,அல்லது மாநிறமாகவோ இருப்பது மனித சருமம் பெற்ற இயற்கை . ஐரோப்பியர் வெளுப்பாகவும், ஆபிரிக்கர் கருப்பாகவும், ஆசியர்கள் மாநிறம் கொண்டவர்களாகவும் இருப்பதே இயல்பு . ஆனாலும் நாம் ஏன் சிவந்தவர்களை இப்படி பிரம்மித்துப் பார்க்கிறோம்? சிவப்பழகுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து அதை அடைவதற்கு இத்தனைப் பிரயத்தனப் படுகிறோம்? நம் நிறத்தையே நமக்குப் பிடிக்காமல் போனது எப்படி ? அமாவாசையில் பொறந்தவனே, கறுப்பி, கருவாச்சி என்றெல்லாம் கேலியும்,கிண்டலும் செய்யும் அளவிற்கு எங்கள் நிறம் தாழ்ந்து போனதெப்படி? இந்த மனோலிலையின் சமூக வரலாற்றுக் காரணிகள்தான் என்ன? நம் கடவுள்களாகிய சிவன் முதல் கிருஷ்ணர் வரை கருப்பானவர்களாகவே புராணங்கள் சித்தரிக்கின்றன. மகாபாரத நாயகி திரௌபதிகூட கருமை நிறத்தவளே. இன்றுவரை அழகுக்கு உதாரணமாக கூறப்படும் கிளியோபாட்ரா கறுப்புப் பெண்ணே! அப்போதெல்லாம் குறையாகத் தெரிந்திராத இந்த நிறம் இப்போது மட்டும் எப்படி இரண்டாம்பட்சமானது ?

தமிழர்களை தமிழர்களே ஆண்டபோது, நம் கடவுள்கள் முதல், அரசர்கள்வரை எல்லோருமே கருப்பாக இருந்ததனால் கருப்பு நிறம் மதிப்பான நிலையில் இருந்தது .அதன் பின் ஆரியர்கள்வருகையோடு தாழ்வு நிலைக்குத் தள்ளப்பட்டு, தொடர்ந்துவந்த முகம்மதியர்கள்,அவர்கள் பின்வந்த ஐரோப்பிய காலணித்துவம் என்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, வெள்ளைத்தோல் மனிதர்களின் ஆளுகை மேலோங்கியது. இவ்வாறு ஆட்சி அதிகாரமும், ஆன்மிக அதிகாரமும் சிவந்த நிறமுடையவர்களின் கையிலேயே இருந்தது. எனவே சிவந்த நிறம் என்பது அதிகாரத்தின் நிறமாக, உயர்ந்த ஆன்மீகத்தின் நிறமாக, மேட்டுக்குடியின் நிறமாக,அழகு நிறைந்ததாக காட்டப்பட்டது. கருப்பு நிறமுடையவர்கள் அழகற்றவர்களாகவும்,அவலட்சணமானவர்களாகவும் அதிகாரத்திற்குத் தகுதியற்ற அடிமைகளாகவும், இழிவின் சின்னமாகவும் கருத்தப்பட்டனர். கறுப்பர்கள் தாங்களே தங்களைப்பற்றி மட்டமாக நினைத்துக் கொள்ள ஆரம்பிக்க வெண்மையின்மீது அவர்களுக்கு ஓர் பயம் ஏற்பட்டது என்றால் மிகையில்லை.

வெண்மையாக இருப்பவன் நேர்மையானவன், புத்திசாலி அழகானவன் என்கிற எண்ணத்தினை வெண்மையாக இருப்பவர்கள் தீர்மானிக்க அதனை கறுப்பர்கள் அப்படியே ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

இவ்வாறே பெருவாரியான மக்கள் கூட்டத்தின் மரபுவழி அழகுணர்ச்சி மனிதத் தோலின் நிறத்தைப் பொறுத்து திசை மாற்றம் பெற்றது எனலாம். சருமத்தின் அழகை உண்மையிலேயே நிறம் தீர்மாணிக்கிறதா?முகம் மற்றும் மேனி நிறத்தை வெளுப்பாக்குவதாக கூறிக்கொண்டு பன்னாட்டு நிறுவனங்கள் கோடிக் கணக்கில் லாபம் கொழிப்பது, சிவந்த தேகத்தில் நம்போன்றவர்களுக்கு இருக்கும் அக்கறையினையே எடுத்துக் காட்டுகின்றது. இந்தத் தாழ்வு மனப்பான்மை நம்மிடம்இருக்கும்வரையில்,எதை எப்படி வேண்டுமானாலும் விளம்பரப்படுத்தி பணம் சம்பாதிக்க முடியும் என்ற வியாபார தந்திரத்தை தொடர்ந்தும் பயன்படுத்திக்கொண்டேதான் இருக்கப்போகிறார்கள். ■








அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## தேசிய உதைபந்தாட்ட போட்டியில் சாதனை படைத்த

# இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் பாராட்டுகள்!





**இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 18 வயது பிரிவு ஆண்களுக்கான தேசிய சம்பியன் ஆகியது**

அகில இலங்கை 18 வயது பிரிவு ஆண்களுக்கான தேசிய உதைபந்தாட்ட போட்டியில் 2:0 என்ற கோல்களின் அடிப் படையில் கொழும்பு ஹமீட் அல் /ஹுசைனி கல்லூரி அணியை வீழ்த்தி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி தேசிய சம்பி யன் ஆகியது. போட்டியின் போது எமது கல்லூரிக்கான இரண்டு கோல்களினையும் செல்வன் சிந்துஜன் பெற்று கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. வாழ்த்துக்கள் வீரர்களே! வெற்றிக்காக அயராது உழைத்த பயிற் றுநர்களுக்கும் எமது வாழ்த்துகள்.

**மகாஜனா 17 வயதுப் பெண்கள் அணி தேசிய சாம்பியன்**

அகில இலங்கைப் பாடசாலைகளுக் கிடையிலான 17 வயதுப் பெண்கள் உதை பந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூ ரி சாம்பியனாகியுள்ளது. இப்போட்டி (24.11.2022) கொழும்பு களணிய பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் பொலனறுவை பன்டிவெவ மகா வித்தியாலயத்துடன் மோதிய மகாஜனா 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சாம்பியனாகயது. இரண்டு கோல்களையும் அணித்தலைவி லயன்சிகா முதல்பாதி ஆட்ட



நேரத்தில் உதைத்து வெற்றியை உறுதிப் படுத்தினார்.கல்லூரிக்கு பெருமைசேர்த்த மாணவிகளை வாழ்த்து கின்றோம்.

**மகாஜனா 20 வயது பெண்கள் அணி தேசிய சாம்பியன்**

அகில இலங்கைப் பாடசாலைகளுக் கிடையிலான 20 வயதுப் பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி சாம்பியனாகியுள்ளது. இப்போட்டி (25.21.2022) கொழும்பு றேஸ் ஹோர்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட் டியில் குருநாகல் பெண்கள் மலியதேவ மகா வித்தியாலயத்துடன் மோதிய மகாஜனா 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சா-



ம்பியனாகயது. முதல் இரண்டு கோல்களையும் அணி உபதலைவி கிரிசாந்தினி (றோஸ்) முதல்பாதி ஆட்டநேரத்தில் உதைத்து வெற்றியை முன்னோக்கி நகர்த்தினார். இரண்டாவது பாதியாட்டத்தில் கிரிசாந்தினி மேலும் ஒரு கோலை செலுத்த ஆட்ட நேர முடிவில் மகாஜனா 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியனாயது. கல்லூரிக்கு பெருமைசேர்த்த மாணவிகளை வாழ்த்துவதோடு, இரு அணிகளதும் வெற்றி க்காக அயராது உழைத்த பிரதம பயிற்றுநர் திரு.சி.சாந்தகுமார்(சாந்தன்) உதவிப் பயிற் றுநர் செல்வி இலக்சனா ஆகியோரை பாராட்டுகின்றோம்.

**வீரர்களுக்கும்,வீராங்கனைகளுக்கும் பிரதேச செயலகத்தால் உற்சாக வரவேற்பு!**

தேசிய மட்டத்தில் சாதனை படைத்து எமது பிரதேசத்திற்கு பெருமை தேடித் தந்த, மாகாஜனாக் கல்லூரி வீரங்கனை களுக்கும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூ ரியின் வீரர்களுக்கும்,பிரதேச செயலகத்தால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. தொடர்ந்து மருதனார்மடத்தில் இருந்து நடை பவனியாக வரவேற்பு.

# யாழ்ப்பாணம் நாவற்குழி நுழைவாயிலில் ஏழு அடி உயரமான சிவலிங்கம்!









07.12.2022 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' வளைவுக்கருகில்,செம்மணி சிவ பூமி வரவேற்பு நுழைவாயிலில் 07 அடி உயரமான சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. நீண்ட காலமாக குறித்த இடத்தில் சிவன் சிலை இருந்த போதிலும்,சிவ பூமி அறக் கட்டளையினரின் ஏற்பாட்டில் நாவற்குழி நுழைவாயிலில் ஏழு அடி உயரமான சிவபெருமான் சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மதப் பெரியவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். கார்த்திகை தீபம் சுடர் ஏற்றி வழிபாடும் இடம்பெற்றது.




அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

12 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காற்று வடிக்கும் சிற்பங்கள்!

சால் என்பன விதம் விதமான மாயாஜால சிற்பங்களை பிரசவிக்கும்.

அண்மைக் காலமாக நான் அவதானித்த ஒரு பரதநாட்டிய வித்தகி இந்த காற்றின் மூலம் பரந்த வெளியில் பல (என் பார்வையில்) உடல் சிற்பங்களை உருவாக்கி வந்ததை அவதானித்து உள்ளேன்.

காற்றின் விசையிலும் உடலின் சமநிலையைப் பேண, காற்றில் பறக்கும் ஆடைகளின் பக்கத்திற்கு எதிராக உடலை அசைத்தும், அசத்தலான சிற்பங்களை விருந்தாக்கி உள்ளார். சில காட்சிகளில் உடல் சிற்பமாக அசையாது நிற்க, ஆடையைக் காற்று அசைத்து அசைத்து, உடலின் மூலவடிவத்தை மேலும் அழகான சிற்பமாகக் காட்டும்.



இந்த இடத்தில் காற்று உடலுக்கு மட்டும் அல்ல, அந்த காற்று வடிக் கும் சிற்பத்திற்கும் உயிர் மூச்சாகிவிடுகிறது.

சிற்பி வடிக்கும் சிற்பத்திற்கும், காற்று வடிக்கும் சிற்பத்திற்கும், நிச்சயமாக இரசனைக் கோணங்கள் வேறு. இதனை ஆரம்பத்தில் சொல்லி இருந்தேன். ஒரு கலை ஒரே கோணத்தில் பார்வையாளர்களை சிந்திக்க வைக்காது, பல கோணங்களில் சிந்திக்க வைக்கவேண்டும். காற்று வடிக்கும் சிற்பம் இதில் இரண்டாம் வகையானது. இனி காற்று எங்கு வீசினாலும் உங்களுக்கு, எங்கோ ஒரு இடத்தில் ஒரு கலைப் பிரசவம் நடந்து கொண்டே இருக்கும் என்ற எண்ணம் தோன்றும். காற்று வடிக்கும் சிற்பங்கள் என்ற ஒரு பார்வை தோன்ற ஒருத்தியும், ஒரு புயலும் காரணம். புயல் எது என முன்பு குறிப்பிட்டு விட்டேன். அந்த ஒருத்தி இவர்தான். அவர் சிறந்த நாட்டிய வித்தகி, சிறந்த கவிஞர், ஓவியர் கலாசாதனா நாட்டிய நிறுவன அதிபர் கவிதா லட்சுமி. (நோர்வே) அவர்கள். அவர்களுக்கு நன்றி

24 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஜனநாயகத்துக்காக குரல் கொடுப்பதால்...

எனக்கூறப்பட்டு பலர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் இன்றும் சிறைச்சாலைகளில் வாடுகின்றார்கள். முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் பதிவிடுபவர்களைக் கூட கைது செய்து தடுப்புக்காவலில் வைப்பதற்கு பயங்கரவாத தடைச் சட்டம் வழிவகுக்கின்றது என்பது இதன் கொடூரத்தன்மைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு.

இவ்வளவு காலமும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடா்பில் மௌனமாக இருந்த சிங்கள அரசியல் செயற்பாட்டாளர்கள் இப்போது வழித்துக்கொண்டமைக்கு அரகலய மீது ரணில் கைத்ததுதான் காரணம். அதனைத் தொடர்ந்துதான் காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான வாகனப் பவனியையும் கையெழுத்து வேட்டையையும் சுமந்திரன் ஏற்பாடு செய்திருந்தார். தென்னலங்கையிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சர்வதேசத்துக்கு அரசாங்கம் வாக்குறுதி கொடுத்துள்ளது. உள்நாட்டிலும் போராட்டங்கள் வெடித்துள்ளது. இந்த அழுத்தங்களால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் நீக்குமா?




இந்தக் கேள்விக்கு இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா. அதற்கான காரணத்தையும் அவர் சொல்கின்றார்.

இலங்கையில் ஒருவரை கைது செய்து தடுத்துவைத்து விசாரணை செய்வதற்காக இருக்கின்ற ஒரேயொரு சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டம்தான். இந்தச் சட்டத்துக்கு கீழ்தான் தடுப்புக்காவல் உத்தரவை வழங்க முடியும். இதன்கீழ் ஒருவரை 18 மாதங்களுக்கு தடுத்துவைத்திருக்க முடியும். இவ்வளவு காலத்துக்கு ஒருவரைத் தடுத்துவைத்து விசாரணை செய்ய வேண்டுமாக இருந்தால் நடைமுறையில் உள்ள ஒரேயொரு சட்டம் இந்த பயங்கரவாத தடைச்சட்டம்தான். எனவே இந்த அரசுக்கு அது தேவைப்படுகின்றது. எந்த அரசு வந்தாலும் இதனை நீக்குவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது என்பதை அவர் அடித்துக்கூறுகின்றார்.

தங்களுக்கு பாதிப்பு வருகின்றது என்பதற்குப் பின்னா்தான் இந்த சட்டமூலத்துக்கு எதிராக சிங்கள மக்கள் இப்போது கையொப்பம் வைக்கின்றார்கள். ஆக, இந்தச் சட்டமூலத்துக்குப் பெயா் மாற்றப்படலாமே தவிர, இந்தச் சட்டமூலம் நீக்கப்படாது என்பதுதான் அவரது கருத்து. ஆக, சா்வதேசத்துக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளின்படி பயங்கரவாதத் தடைச் சட்டம் மாற்றப்படுவதாக அரசாங்கம் சொன்னாலும், இதேபோன்ற கொடூரமான மற்றொரு சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவரும் என்பதைத்தான் எதிர்பார்க்கலாம்.

**r.bharatigmail.com**

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## எங்களின் நிஜ சூரரைப்...

தரையில் நின்ற அனைவரது கவனமும் தரையிறங்கிக் கொண்டிருக்கும் விமானத்தில் குவிந்திருக்க, விமானம் தரைதட்டி, விமான ஓடுபாதையில் வேகமாகவே ஓடத் தொடங்கி, ஒருவாறு ஓடி முடித்து நிறுத்தத்திற்கு வருகிறது. எந்தவித தொழில்நுட்ப உதவிகளுமின்றி. தரையில் இருந்து மேலெழுந்து, வானில் பறந்து, மீண்டும் விமானத்தை தரையிறக்கிவிட்டு, விமானத்தை விட்டு இறங்கிய இரு விமானிகளையும், விமானத்தடியிலேயே வந்து, "தமிழன் பறந்திட்டான்" என்று முகம் மலரச் சொல்லி தேசியத் தலைவர் வரவேற்றாராம்.

புலிகளின் முதலாவது பறப்பு முயற்சிக்கு தரையில் இருந்து உதவிய வான்புலிகள் அணியில் அங்கம் வகித்த ரூபன் தான், பெப்ரவரி 20, 2009 அன்று கொழும்பைத் தாக்கிய கடைசி வான்புலிகள் கலங்களில் ஒன்றை இயக்கி, தற்கொடையான கேணல் ரூபன்.எங்களின் நிஜ சூரரைப் போற்றுவோம்!

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இறக்குமதி அல்ல இவன் மதி

அவர் சொன்னால் கண்டிப்பாக, பார்த்து செல்வது வழக்கம். ஒரு முறை நான் சென்று பார்த்தபோது அவர் இருவர் சேர்ந்து ஓடும் சைக்கிள் ஒன்றை வடிவமைத்து, அதற்கான வேலைகள் செய்துகொண்டு இருந்தார். அவரது முயற்சி வெற்றிதருமா எனக்குப் புரியவில்லை.

இவ்வளவு சிறப்பான நுட்பம் தெரிந்தவர், வெடிமருந்து கலந்து வெடி ஒன்று, புதுவருடத்திற்கு வெடிப்பதற்கு செய்த வேளை. அது தானாக வெடித்து அவரது இரு கரங்களிலும், விரல்களை துண்டாடிவிட்டது. இருந்தாலும், அவரது ஆற்றல் கடுகளவேனும் துண்டாடப்படவில்லை. ஒரு நாள் மாலை குரும்பசிட்டியில் என் வீட்டு படலைக்குள் நிற்கிறேன்.

கண்ணன் ஓடுது பார் இரட்டைச் சைக்கிள், என்றபடி இருவர் ஒரு சைக்கிளை ஓடி வந்து என் வாசலில் நிறுத்தினர். என்னை கண்ணன் அன்று ஆனந்தமாக அழைத்து, தனது தயாரிப்பை காட்டியவர் யார் தெரியுமா?

அவர்தான் கட்டுவன் ஜெயராஜசிங்கம் அவர்கள். இப்போது உங்களில் பலருக்கு அவர் அறிந்தவராக இருக்கலாம். என்னை விடவும் அவரது பல தொழில் நுட்பங்களையும்,அதிகம் கண்டு மகிழ்ந்தவர்களாகவும், இருக்கலாம். இவர் யூனியன் கல்லூரி பழைய மாணவர். கடந்த மாதம் தனது 90 வயதினை சுற்றத்தார் நண்பர்களுடன் கொண்டினார். பழைய நினைவுகள் வரும் போது ஒரு சிலர் கண்டிப்பாக நினைவுகளுக்குள் வந்து போவார்கள். அவர்களில் ஜெயராஜசிங்கம் அவர்களும் ஒருவர்.

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:-
பண்டாரவன்னியன் புத்தகசாலை
இல., 113 பாடசாலை வீதி,
பண்டாரிகுளம், வவுனியா, இலங்கை
+94772244616

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

# சவால்களுடன் போராடும் சமந்தா



தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கும் சமந்தா சமீபத்தில் மயோசிடிஸ் என்ற அரிய வகை தசை அழற்சி நோய் பாதிப்பு தனக்கு ஏற்பட்டு இருப்பதாக தெரிவித்து ரசிகர்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தினார்.

இது தொடர்பில் சமந்தா அளித்துள்ள பேட்டியில், எத்தனையோ போராட்டங்களில் ஜெயித்த நான் தற்போது ஏற்பட்டுள்ள ஆரோக்கிய பிரச்சினையில் இருந்தும் மீள்வேன் என்ற நம்பிக்கை உள்ளது.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் சில நல்ல நாட்கள் இருக்கும் சில கெட்ட நாட்களும் இருக்கும். அடுத்து இதற்கு மேல் இன்னும் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது போல இருக்கிறது என நான் பயந்த சந்தர்ப்பங்கள் எவ்வளவோ இருக்கிறது. நான் ஒரு முறை எதையாவது முடிவு செய்தால் அதை செய்தே தீருவேன் என்றார்.



# ரஜினியின் 'ஜெயிலர்'


நடிகர் ரஜினிகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு படக்குழு அவரது கதாபாத்திரம் அறிமுக காட்சியை வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் இந்தப் படத்தில் வில்லனாக நடித்து வரும் கன்னட சூப்பர் ஸ்டாரான ஷிவ ராஜ்குமாரின் தோற்ற புகைப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் வெளியிட்டிருந்தது. இந்தப் படத்தில் ரஜினியின் கதாப்பாத்திரம் முத்துவேல் பாண்டியன்.

அவர் மாஸாக கத்தியை எடுத்துகொண்டு கிளம்பும் காட்சிகள் வெளியாகியுள்ளது. விருவிருப்பாக நடைபெற்றுவரும் இப்படத்தின் படப்பிடிப்புகள் 50 சதவிகிதம் முடிந்து விட்டதாக தகவல் வெளியானது.

'ஜெயிலர்' படத்தை2023, ஏப்ரல் 14 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது.

# மீண்டும் தொடங்கிய இந்தியன்-2



ராம்சரணின்படப்பிடிப்புக்காக நியூசிலாந்து சென்றிருந்த இயக்குநர் ஷங்கர் கடந்த 3 ஆம் சென்னை திரும்பிய நிலையில், கமல்ஹாசனின் இந்தியன் 2 படத்தின் படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்கிய நிலையில் தொடர்ந்து 15 நாட்கள் இந்த படப்பிடிப்பு நடைபெறவுள்ளது.

# சினிமாவில் த்ரிஷா 20 ஆண்டுகள்



மும்பை, ஆந்திரம் மற்றும் கேரளத்தில் இருந்து வந்த நடிகைகளே தமிழ்த் திரையுலகில் ஆதிக்கம் செலுத்தி உள்ளார்கள். தமிழ் ரசிகர்களும் எந்தப் பேதமும் பார்க்கமால் இதர மொழிக் கதாநாயகிகளைக் கொண்டாடி வருகிறார்கள். இந்தச் சூழலை மாற்றிக் காட்டியவர், த்ரிஷா.

முதல் வாய்ப்பை லேசா லேசா வழங்கினாலும் அமீர் இயக்கிய மௌனம் பேசியதே (2002) தான் த்ரிஷா, கதாநாயகியாக நடித்து வெளிவந்த முதல் படம். பின்னர் கில்லி, திருப்பாச்சி, ஆறு என பல்வேறு ஹிட் படங்களில் நடித்தார்.

த்ரிஷா நடிப்பில் 2019-ல் பேட்ட, 2021-ல் பரமபதம் விளையாட்டு ஆகிய படங்கள் வெளியாகின.

சமீபத்தில் வெளியான பொன்னியின் செல்வன் படத்தில் அவரது கதாபாத்திரம் பெரிதும் பேசப்பட்டது. அவரது அழகு கூடிக்கொண்டே போனதாக ரசிகர்கள் பாராட்டினர்.

பொன்னியின் செல்வன்-2, சதுரங்க வேட்டை-2, ராம் (மலையாளம்) ஆகிய படங்கள் அடுத்து வெளிவரவுள்ளன. த்ரிஷா நடிக்கும் புதிய இணையத்தொடர் படப்பிடிப்பு முடிந்ததாக த்ரிஷா சமீபத்தில் தெரிவித்திருந்தார். அறிமுக இயக்குநர் அருண் வசீகரன் இயக்கத்தில் உருவாகும் தி ரோட் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார் த்ரிஷா.

இந்நிலையில் சமூக வலைதளத்தில் த்ரிஷாவின் 20 ஆண்டுகால வெற்றியை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். காமன் டிபி எனும் பொதுவான போஸ்டரை ரசிகர்கள் பகிர்ந்து ட்விட்டரில் டிரெண்டிங் செய்து வருகின்றனர்.


Sukan Secure Versicherungsmakler
Versicherungen - Bausparen
தைப் பொங்கல் வாழ்த்துக்கள்
இப்போதே உங்கள் வாகன காப்புறுதியை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்!

K. Sukan
Versicherungskaufmann
OSTENALLEE 25, 59063 HAMM
TELEFON (02381) 3600762 MOBIL (0179) 7190138
www.sukan-secure.de - info.sukan-secure@mail.de
30.11. KFZ-Versicherung wechseln und GELD sparen!
Kfz Switch möglich, wenn ...
Versicherungsnehmer 20-70 Jahre
Vorversicherung mindestens 6 Monate
Kein Haftpflichtschaden in letzten 2 Jahren
Highlights
- 5% günstigere Prämie
- 3 Jahre Beitragsstabilität
- keine Kilometerbegrenzung
- offener Fahrerkreis
- begleitetes Fahren ab 17
- freie Werkstattwahl
- Besitzstandsgarantie* (u.a. Rabattschutz)
- vollumfängliche Haftpflichtdeckung im Ausland (u.a. asiatischer Teil der Türkei)
- Übernahme von Sondereinstufungen
- digitale Vertrags- und Schadenverwaltung per App
Egal wo!
Beispiel:
Sie zahlen 1000 EUR
-bei Ihrer jetzigen Versicherung jährlich-
Bei uns kostet das 5% weniger bei besserer Leistung
950 EUR!


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
அனைத்து சேலைகள், பஞ்சாபிகள்,
சேலைகளுக்கான பாதணிகள் யாவும்
அதிரடி மலிவு விலையில்.
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen
தைப் பொங்கல் வாழ்த்துக்கள்


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria
VALUTRANS
MoneyGram
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282
இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
SALE
Stuttgart தனில்...
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam
Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
யேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1
Real Estate Agent
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
www.nagaselvam-remax.de


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய இடத்தில்!!! புதிய பொலிவுடன்!!
SARAVANAA BHAVAN
OPEN
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698
இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்